இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 01 | திகதி : 16.01.2022 | விலை : 30.00

## நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்து மறை ஆசிரியர் உருவாக்கப்பயிற்சி

### – வடக்கு – கிழக்கு ஆயர்கள் மன்றத்தில் தீர்மானம் –



வடக்கு-கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் ஆறாவது கூட்டத்தொடர் கடந்த 12-01-2022 அன்று வவுனியாவில் நடைபெற்றது. இக்கூட்டத்தின்போது நான்கு தமிழ் மறைமாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் இளையோருக்கு ஒன்றிணைந்த மறை ஆசிரியர் உருவாக்கப் பயிற்சியை ஏற்பாடு செய்து நடாத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

இதன்படி யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மறைமாவட்டங்களிலிருந்து தலா 12 பயிலுனர்கள் தெரிவுசெய்யப்பட்டு இவர்களுக்கான ஒருமாத கால வதிவிடப் பயிற்சியை மடுத்திருத்தலத்திலுள்ள தியான இல்லத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவிருகின்றன.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகள் நான்கு மறைமாவட்டங்களின் மறைக்கல்வி நிலைய இயக்குநர்களோடு இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார். வருகிற யூலை மாதம் இப்பயிற்சி நடாத்தப்படும்.




அரிசியோடு ஆழமான உறவும்
கரும்போடு நெருங்கிய
பிணைப்பும் கொண்ட
பொங்கல் பாரம்பரியமே
வயிற்றிற்கும் மனதிற்குமிடையே
நீ படைக்கும் விருந்து
ஆத்மார்த்தமானதுதான்
ஆயினும்
மனம் படைக்கும்
பெரும் கனிவும்
பேரன்பும்
நம்பிக்கையும்
விளிம்பு மீறி பொங்கட்டும்
காலத்தின் அதீத தேவையாய்

பாதுகாவலன் வாசக நெஞ்சங்களுக்கு
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் யாழ் ஆயரைச் சந்தித்து ஆசீர் பெற்றார்



இலங்கையின் வட பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் யாழில் நடைபெற்ற பல நிகழ்வுகளில் பங்கு கொண்டிருந்த நிலையில் 12ம் திகதி புதன்கிழமை தன்னுடைய பிறந்த தினமாகிய அன்று யாழ். ஆயர் இல்லத்திற்குச் சென்று யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து ஆசீர் பெற்றுக்கொண்டார். இச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான புத்திக பத்திரண எரான் விக்கிரமரட்ண ஆகியோரும் கலந்து கொண்டனர். இச் சந்திப்பில் வடக்கின் தற்போதைய நிலை மற்றும் இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## வடக்கு, கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் அமைதி ஆய்வு நிறுவனம் நடத்தும் திறந்த ஓவியப் போட்டி

“அமைதி, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகளற்ற பண்பாட்டை உருவாக்குவோம்.” என்ற கருப் பொருளில் வடக்கு - கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் அமைதி ஆய்வு நிறுவனம் (PEACE RESERCH INSTITUTE) அனைவருக்குமான ஓவியம் வரையும் போட்டி ஒன்றை நடாத்தவிருக்கின்றது.

நான்கு தமிழ் மறைமாவட்டங்களிலுமுள்ள அனைவருக்கும் இவ் ஓவியப்போட்டியில் பங்குபற்றுவற்கான அழைப்பு விடுக்கப்படும். வடக்கு - கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் அமைதி ஆய்வு நிறுவனம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கங்களில் ஒன்றாகும்.

சிறந்த ஓவியங்களுக்கு சான்றிதழும், பணப்பரிசுகளும் வழங்கப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் ஓவியங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதோடு அவை அனைத்தும் அமைதி ஆய்வு நிறுவனத்தின் ஓவியக்கண்காட்சிக் கூடத்தில் நிரந்தரமாகக் காட்சிப்படுத்தப்படும். இதுபற்றிய அறிவித்தல் விரைவில் வெளியிடப்படுமென இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் அடிகள் தெரிவித்தார்.

## ஐந்தாவது வருடத்தில் "ஞானதீபம்"



“ஞானதீபம்” அமதிகள் இளையோர் திறன் விருத்தி மையமானது ”பிறரை உயர்த்துவதன் மூலம் நாமும் உயர்வோம்” என்னும் விருதுவாக்குடன் பல இளையோர், யுவதிகளின் உருவாக்கல் களமாக அமைந்து வருகின்றது. இளையோருக்கான வேலைவாய்ப்பு சம்மந்தமான கற்கை நெறிகள், கருத்தமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள், இன்னும் பல்வேறு விதமான செயற்பாடுகளும் இந்நிலையத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

அமரர் அருட்பணி. பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளாரின் புனை பெயரில் இயங்கும் இந்நிலையத்தின் 5ம் ஆண்டு நிறைவு நிகழ்வு கடந்த 21. 12. 2021 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக அமலமரித்தியாகிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்பணி இயூஜின் பெனடிற் அமதி அடிகளாரும், சிறப்பு விருந்தினராக யாழ் மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் அடிகளாரும் மற்றும் பல குருக்கள் துறவியர் பெற்றோர் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் எனப் பலரும் சமூகம் தந்திருந்தனர்.

## கூட்டொருங்கியக்கத் தேசிய மாநாடு ஜூன் மாதம் கொழும்பில் நடைபெற ஏற்பாடு




2023ம் ஆண்டு நடைபெறவுள்ள கூட்டொருங்கியக்கம் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான மறைமாவட்ட மட்டத்திலான தயாரிப்புப்பணிகள் முடிந்த பிற்பாடு இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களும் ஒன்றிணைந்ததான தேசிய மாநாடு வருகிற யூன் மாதம் 14ம் திகதி பொரளையிலுள்ள அக்குவைனாஸ் உயர் கல்வி கூடத்தில் நடைபெறவுள்ளது. இலங்கைத் திரு அவையில் கூட்டொருங்கியக்கச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான கொழும்பு துணை ஆயர் பேரருட்திரு அன்ரனி ஜெயக்கொடி தலைமையிலான குழுவினரின் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இம்மாநாட்டில் இலங்கையிலுள்ள வத்திக்கான் தூதுவரோடு இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களின் ஆயர்களும், மறைமாவட்டங்களில் கூட்டொருங்கியக்கச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்களும், தேசிய கூட்டொருங்கியக்கச் செயற்குழு அங்கத்தவர்கள், மற்றும் குருக்கள் துறவியரின் பிரதிநிதிகள், குருத்துவக்கல்லூரிகளின் அதிபர்கள், துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகள், பொது நிலையினரின் பிரதிநிதிகள், இளையோரின் பிரதிநிதிகள் போன்றோர் பங்குபற்றுவர்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## ஜெனீவா அமர்வும் ஐ.நாவில் இந்தியாவும்

இந்தோ- பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விவகாரத்தை மையமாக வைத்து ஈழத்தமிழர் விவகாரம் கையாளப்படுகின்றது என்பது பட்ட வர்த்தனம். இந்தவொரு நிலையில், அமெரிக்க - இந்திய அரசுகளைத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கு ஏற்ப செயற்படவைக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இனிமேல் சிவில் சமூக அமைப்புகளிடமே வந்திருக்கின்றது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் தேர்தல் அரசிய லில் மாத்திரம் கவனம் செலுத்தியுள்ள தமிழ்த்தேசியக் கட்சிகள், வல்லரசு நாடுகளின் நிகழ்ச்சிநிரலுக்கு வசதியான முறையிலேயே அவ்வப்போது இயங்குகின்றன என்பதைக் கடந்த பன்னிரெண்டு வருடங்களாக அவதானித்திருக்கின்றோம்.

2009 இற்கு முன்னரான காலத்திலும் சரி அதற்குப் பின்னரான சூழலிலும் சரி, இந்தியா ஈழத்தமிழர் விவகாரத்தில் நேரடியாகவும் மறை முகமாகவும் பங்கெடுத்திருக்கின்றது. இதன் பின்னணியில் இந்தியாவை எப்படிக் கையாள்வது என்றதொரு செயல்திட்டம் தமிழர்தரப்பிடம் இதுவரை இல்லை.

தற்போது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையில்லாத நிலையிலும் இரண்டாவது முறையாகவும் தற்காலிக உறுப்பினராக இந்தியா இணைத்துக் கொள்ளப்பட்டி ருக்கின்றது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சர்வதேச பாதுகாப்பு தொடர்பான முன்னுரிமைகளை ஒருங்கிணைப்பது மற்றும் வலுவூட்டு வதை இந்தியா மேற்கொள்ளுமென ஐ.நா.,வுக்கான இந்தியத் தூதர் டி.எஸ். திருமூர்த்தி கூறியிருக்கிறார்.

ஐ.நா., சபையில் மிகவும் முக்கியமான பாதுகாப்புச் சபையில் 15 நாடுகள் உறுப்புரிமை பெற்றிருக்கின்றன. ஆனால் நிரந்தரமில்லாத உறுப்புரிமையில்லாத இந்தியா இந்த ஆண்டும் தற்காலிக உறுப்பு நாடா கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு, யூன் மாதம் தற்காலிக உறுப்பினராக இந்தியா நியமனம் பெற்றிருந்தது.

இந்தியா இவ்வாறு எட்டாவது முறையாகவும் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினராகப் பதவி வகிக்கின்றது. இந்தக் காலகட்டங்களில், இந்தியாவின் முன்னுரிமைகளை உறுதியாக வும், ஆக்கபூர்வமாகவும் உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்தியதாகத் திருமூர்த்தி கூறியிருக்கிறார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு இந்தியா தலைமைப் பொறுப்பையும் ஏற்றிருந்தது. இது இந்தியாவுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் கொடுக்கின்ற கௌரவமாகவே அவதானிக்கலாம். ஏனெனில் சீனாவை மையப்படுத்திய இந்தோ- பசுபிக் விவகாரத்திற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம். அதனால், இந்தியாவுக்கான இந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது என்பது கண்கூடு.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் தலைமை தாங்கியபோது, கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாதம் போன்ற பல முக்கிய பிரச்னைகளை இந்தியா முன்னிறுத்தியிருந்தது.

மீண்டும் தற்காலிக உறுப்புரிமை நீடிக்கப்பட்டுத் தலைமைப் பொறுப்பும் வழங்கப்படவுள்ள சூழலில், கடல்சார் பாதுகாப்பு விடயங்கள் உள்ளிட்ட குறிப்பாக இந்தோ- பசுபிக் பாதுகாப்பு விவகாரம் போன்ற விடயங்களில் இந்தியா கூடுதல் கவனம் செலுத்தக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

இந்தவொரு சூழலில் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவா அமர்வு நடைபெறவுள்ளது. இம்முறை இலங்கை விவகாரம் குறித்து மனித உரி மைச் சபையின் ஆணையாளர் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளார். இதன் பின்னணியில் இந்தியப் பிரதமருக்கு அனுப்பவுள்ள கடிதம், ஆணையாளரின் அந்த அறிக்கையை மேலும் மென்மையாக்கக்கூடிய ஏதுநிலையே காணப்படுகின்றது.

ஆகவேதான் ஈழத்தமிழர் அரசியல் விடுதலை விவ காரங்களில் இனிமேல் சிவில் சமூக அமைப்புகள் மேலெழ வேண்டிய கட்டாயச் சூழல் உருவாகியிருக்கின்றது. நீதியான அழுத்தம் ஒன்று இருக்குமானால், சர்வதேச நாடுகள் அதனைச் செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் எழும்.

ஏனெனில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை நீடிக்கப்பட்டா லும், முஸ்லிம் பெண்களை ஏலம் விடும், 'சல்லி டீல்ஸ்' என்ற சமூக வலைத்தளம் இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளமைக்கு ஐ.நா கடும் கண்டனம் வெளியிட்டிருக்கின்றது. அத்துடன் வெறுப்பு, பேச்சு போன்ற வற்றுக்கு இந்தியா இடமளிக்கக்கூடாதெனவும் அந்தக் கண்டனத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், சர்வதேசத்தை நோக்கிய ஈழத் தமிழர்களின் அழுத்தம் தீவிரமடைந்தால் நிச்சயமாக ஈழத்தமிழர் களுக்கு நீதி கிடைக்கும். விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவும் அதற்கு இணங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# துயர் பகிர்கின்றோம்

யாழ் மறைமாவட்ட அமலமரிதியாகிகள் சபையைச் சேர்ந் அருட்பணி செ.அன்புராசா அடிகளாரின் அன்புத்தந்தை "கலைத்தவசி" **திரு. குழந்தை செபமாலை** அவர்கள் கடந்த 08.01.2022 அன்று இறைபத மடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

யாழ் மறைமாவட்ட அமலமரிதியாகிகள் சபையை சேர்ந்த வரும் யாழ் போதனா வைத்தியசாலையின் ஆன்மீகக் குருவாகவும் பணியாற்றிவரும் அருட்பணி S. அருள் சுதர்சன் அடிகளாரின் அன்புத்தந்தை **திரு. மனவல் சிலுவைராசா** அவர்கள் கடந்த 12.01.2022 அன்று இறை பதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

# யாழ் கலாசாரப் பேரவையினால் கலைத்துறையினருக்கு வழங்கப்படும் விருதுகளுக்குரிய விண்ணப்பங்களுக்கான அறிவித்தல்கள்

## யாழ் ரத்னா விருது – 2022

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய யாழ்ரத்னா விருதுக்கு கவிதை, சிறுகதை நாவல், நடனம், ஓவி யம், சிற்பம். நாடகம் குறும்படத்துறை, இசைநாடகம். இசை (வாய்ப்பாட்டிசை. பண்ணிசை. இசையமைப்பு.) வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம். புல்லாங்குழல். மிருதங்கம். வயலின் வீணை. ஓர்கன். ஆர்மோனியம், போன்றன) கூத்து (வடமோடி தென்மோடி சிந்துநடை) கிராமியக்கலைகள் (கரகம், காவடி கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, மொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி, போன்ற தொடர்புடைய கலைகள்) இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு ஒப்பனைக்கலை (நாடகங்கள். கூத்துக்கள், நடனக்கலைத்துறைகளுக்கானவை) ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத் தினைக் கொண்ட 60 வயது பூர்த்தியடைந்தவர்களும் இதுவரை இவ்விருதினைப் பெற்றுக் கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்க முடியும், விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப்பிரதிகளுடன் 20.01.2022ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்பிக்கவும்.

## இளங்கலைஞர் விருது – 2022

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய இளங்கலைஞர் விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம்). ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசைநாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு ) வாத்தியக்கலை (தவில் நாதஸ்வரம். புல்லாங்குழல், மிருதங் கம் வயலின், வீணை. ஓர்கன், ஆர்மோனியம் போன்றன) கூத்து (வடமோடி. தென்மோடி, சிந்துநடை கிராமியக்கலைகள் (கரகம், காவடி கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப் பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்) இசைக் கலை (வாய்ப்பாட்டு பண்ணிசை இசையமைப்பு) ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள். நடனக்கலைத்துறைகளுக்கானவை) ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செய லகப்பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட ஏற்கனவே இளம் கலைஞருக்கான கலைத்துறைச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத யாழ்ப்பாண பிர தேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையினை - சான்றுப்படுத்தும் ஆவணப்பிரதிகளுடன் 20.01. 2022ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்.

## யாழ் பாடி – 06 மலருக்கான ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பேரவையினால் இவ்வருடம் வெளியிடப்படவுள்ள யாழ் பாடி 06 பிரதேச மலரானது ஆக்க இலக்கிய சிறப்பு மலராக வெளிவரவுள்ளது. இம்மலருக்கு கவிதை. சிறுகதை, நூல் விமர்சனம். சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், மருத்துவம். வணிகம். உளவியல், நாடக எழுத்துரு. ஆய்வு (இலக்கியம் தொல்லியல், ஆன்மீகம். வரலாறு) சூழலியல் சமூகவியல், கிராமியக் கலைகள், கலை மரபும் பண்பாடும். அறிவியல் போன்ற தலைப்புகளில் ஆக்கங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. பிரதேசம் சார்ந்த தொன்மைகளை அடையாளங்கண்டு பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் ஆக்கங்களாக அமைய வேண்டும், கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது கணணியில் தட்டச்சுப் பதிப்பாகவோ சமர்ப்பிக்க முடியும். கவிதை தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் யாவும் A4 தாளின் இருபக்கங்களுக்கு மேற்பட்டவையாக அமைந்திருத்தல் வேண்டும். சுய படைப்பாக அமைவதுடன் ஏற்கனவே வெளிவந்தவையாக அமைதல் ஆகாது., மலர்க்குழுவின் தீர்மானத்துக்கமைய தரமான ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கடிதவுறையின் இடது பக்கமூலையில் யாழ்பாடி - 06 பிரதேச மலர் எனக்குறிப்பிட வேண்டும். ஆக்கங்களுடன் முழுப்பெயர் முகவரி, தொலை பேசி இலக்கத்துடன் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம். யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 28.01.2022ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

## கலைஞருக்கான ஊக்குவிப்பு வழங்கல்

யாழ்ப்பாண பிரதேச செயலகபகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர்கள், எழுத்தாளர் களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான நிதியுதவி யினை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயல்திட்டத்தின் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கையினை யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பேரவை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு தரமதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய கலை ஞர்கள் தெரிவு செய்யப்படுவர் இதற்குத் தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசா ரப்பிரிவுடன் தொடர்புகொள்ளவும்.

**இவ் அறிவித்தல்களை யாழ் பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவை யின் தலைவருமான திரு.எஸ்.சுதர்சன் அவர்கள் பாதுகாவலன் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.**

## காவலன் கலசம்

எனது நீண்டகால வாழ்க்கையில் இவ்வருடந்தான், பொங்கல் நாளையொட்டி இப்படி ஒரு தலைப்புடன் இக்கட்டுரையை வரைகின்றேன். மன்னிக்கவும். யதார்த்தமாக சிந்தித்தால், எழுதினால், பேசினால் எதிர்ப்புக்கள் வரும். சிலருக்குக் கோபம்கூட வரலாம். இது, உலகறிந்த உண்மை. அதனால் கற்பனை உலகிலோ கனவுலகிலோ வாழவிரும்பவில்லை. போலி நம்பிக்கையை உருவாக்க விரும்பவில்லை. ஒரு சிலர் எதிலும் தீமையையே பார்ப்போர் என்றும் (Pessimists), வேறு சிலர் அனைத்திலும் நன்மையையே பார்ப்போர் (Optimists) என்றும் இரு காட்சிகளாகப் பிரித்து நடைமுறை நிகழ்வுகளாகப் பார்ப்பார்கள். ஆயினும், மூன்றாவது ஒன்று உண்டு. அதுதான், அனைத்தையும் யதார்த்தமாகப் பார்ப்பது. கோடரியைக் கோடாலி என்று கூறுவோர், இவர்கள். நான் இந்த வகையைச் சேர்ந்தவன், இதைத் தொடருமுன், ஒரு விளக்கத்தைக் கூற வேண்டியது அவசியம். அதாவது, வாழ்வில் ஏற்பட்ட வேதனைகளில் இருந்து, நோவுகளிலிருந்து விடுதலை பெற்று நன்மை நோக்கி வாழலாம்: வாழவேண்டும். இதற்கு எனது சொந்த வாழ்வே ஒரு சான்று.

### சொல்லில்...

சில சொற்களில் ஒரு தனிக் கவர்ச்சி உண்டு. அக்கவர்ச்சியில் ஒரு மலர்ச்சி உண்டு. அம்மலர்ச்சியில் ஒரு மகிழ்ச்சி உண்டு. அப்பேர்ப்பட்ட சொற்களில் ஒன்றுதான் - 'பொங்கல்'. இச் சொல்லில், அந்தக் கவர்ச்சியும், மலர்ச்சியும், மகிழ்ச்சியும் உண்டு. அதனாலேயே 'பொங்கலோ!' 'பொங்கல்!' என்று ஆர்ப்பரிக்கின்றோம். பானையில் பால் வார்த்துக் காய்ச்சும் பொழுது, அந்தப் பால் பானைக்கு மேல் எழும்பி விழிம்பால் வழிகின்றதைப் பார்த்துத்தான் "பொங்கலோ!" "பொங்கல்!" என்று ஆர்ப்பரிக்கின்றோம்.

### ஆனால்...

இது ஒரு பெரிய "ஆனால்". இந்த "ஆனால்" தான் இம்முறை பொங்கலை மாற்றி அமைக்கின்றது. பானையில் ஊற்றுவதற்குப் பாலில்லை, அன்றேல் பாலின் விலை வருவாய்க்கு மேல். அதனால், பாலைப் பெற முடிவதில்லை. புதுப்பானை வாங்கவே பணமில்லை. எரிப்பதற்கு விறகு வாங்கக்கூடப் பணமில்லை.

ஏதோ ஒரு வகையில் புதுப் பானை பெற்று, அதில் பால் வார்த்து, விறகெரித்து, பால் பொங்கி வரும் வேளையில் அதில் புத்தரிசி போட அரிசி இல்லை. இவ்விடத்தே உழவர்களை நினைக்கின்றோம். விவசாயம் செய்ய உரமின்றி, தாம் நம்பியிருந்த விவசாயத்தை உழவர்கள் கவலையுடன் கைவிட்டு விட்டார்கள். ஒரு சமூகத்தின் ஆணிவேர் விவசாயி.

**"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து"**

என்று குறள் தெளிவாகவே கூறுகின்றது. அதாவது உழுதலை செய்யாது பிற தொழில்களை மேற்கொள்வோரையும் தாங்குவது உழுதலாலேயே. அதனாலேயே உலகத்தார்க்கு உழுதல் ஆணி. உழுதல் ஓர் அத்தியாவசியத் தொழில். ஆனால், நாடுகள் உழுதலை அவ்வாறு கணிக்கிறார்களோ? குறள் சமைத்த பெருந்தகை ஒரு படி மேற்சென்று

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்"**

என்று குறளொன்றை யாத்தார். இதன் பொருள் என்ன? எல்லோரும் உண்டுவாழ உழுதலைச் செய்து, அதனால் தாமும் உண்டு வாழ்கின்றவர்கள் உழவர்கள். மற்றவர்களெல்லாம் பிறரைத் தொழுது, அதன் மூலம் தாம் உண்டு வாழ்பவர். இப்படிப்பட்ட உழவர்களின் இன்றைய நிலை என்ன? உரம் இன்றி உழவை விட்டு விட்டார்கள். உதவி இல்லை, அவர்கள்பால் அக்கறை இல்லை, இந்த நிலையில் வீட்டிற்கு அரிசி வருமா? மேசையில் சோறு வருமா?

### உழவர் நாள் – நன்றி கூறும் நாள்

பொங்கல் நாள் உழவர்களின் விழா. அது, நன்றி கூறும் விழா. உழவர் உழுதலைக் கைவிட்ட நிலையில், பொங்கலைக் கொண்டாடப் பணமில்லா நிலையில் யாருக்கு நன்றி கூறுவது? எப்படிப் பொங்குவது?




### உணவுப் பற்றாக் குறை

"இவ்வாண்டு உணவுப் பற்றாக் குறை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது" என்று ஆண்டின் முதல் நாளே அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்தின எச்சரித்துள்ளார். இந்நிலையில் எங்ஙனம் பொங்கல் விழாவெடுப்பது? வயல் எங்கே, தோட்டம் எங்கே? அறு-

**கரைவையூர்ச் செல்வம்**

வடை செய்வது எப்படி? என்று ஒன்றுமே தெரியாத கட்டிடக் காட்டில் அடுக்குமாடி வீடுகளில் வாழ்வோர் ஒரு வேளை பொங்கலாம். சுப்பர் மார்கெட்டில் அரிசி வாங்கி சோறாக்கி உண்பவர்களுக்கு அந்தச் சோற்றிற்கும் உழவர்களுக்கும் உள்ள தொடர்பு தெரியாது. அதனால்தான் என்னவோ, இவர்கள் உரமில்லாமல் விவசாயத்தைக் கைவிட்டவர்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. தங்களை வாழவைக்கும் உழவர்களுக்காக இவர்கள் நீதி கோரவில்லை ஏன்?

### நானும் நீயும்

இயல்பாகவே இணைக்கப்பட வேண்டியவை, செயற்கையாக அறுபடும் பொழுது அல்லது துண்டிக்கப்படும் பொழுது உறவுகளும் துண்டிக்கப்படுகின்றன. நாமனைவருமே ஒருவர் ஒருவரில் தங்கி நிற்கின்றோம். அதாவது நான் வாழ, நீ வேண்டும். நீ வாழ, நான் வேண்டும்.

என்னை யாரென்று அறிய நீ வேண்டும். உனது உறவு வேண்டும். அந்த உறவில் தான் நான் என்னை அறிகின்றேன். இதைத் தன்னறிவு என்று கூறலாம்.

அதேபோன்று நான் சோறு உண்ண சோறு வேண்டும். சோறாக்க அரிசி வேண்டும். அரிசி நெல்லில் இருந்து பெறப்படுகின்றது. அந்த நெல்லை அறுவடை செய்பவர்தான் உழவர்கள்.

வயலை உழுது, உரிய காலத்தில் நெல்விதைத்து, பருவ மழையால் வரம்புயர நெல் உயரும். கதிரவனும் ஒளி கொடுக்க வேண்டும். இன்றும், உழுவதற்கு மாட்டைப் பயன்படுத்தும் உழவர்கள் உண்டு. உழுவதற்குரிய இயந்திரம் வந்தாலும் மாட்டின் பயன் இல்லாமல் போகவில்லை. இயந்திர உலகம் தோன்று முன்னர், மாடுதானே முக்கியமான உயிர்ப்பிராணியாக இருந்தது. உழுவதற்கு மட்டுமல்ல, சூடடிக்க வண்டில் இழுக்க, பால் தருவதற்கு, அந்தப் பாலில் இருந்து தயிர் செய்ய, மோர் செய்ய என்று மாடு மனிதருக்கு எவ்வளவு உதவி புரிகி றது. இந்த மாட்டை வருத்தலாமா? இந்த மாட்டைக் கொல்லலாமா? இன்னுமோர் படி சென்று இந்த மாட்டைக் கொன்று உண்ணலாமா? இப்படிப்பட்ட சிந்தனை தான் தமிழர்கள் மாட்டை மதிக்கப் பழகினார்கள். அதனாலேயே மாட்டுப் பொங்கல் உருவானது.

> நாமனைவருமே
> ஒருவர் ஒருவரில் தங்கி நிற்கின்றோம்.
> அதாவது
> நான் வாழ, நீ வேண்டும்.
> நீ வாழ, நான் வேண்டும்.
> என்னை யாரென்று அறிய
> நீ வேண்டும்.
> உனது உறவு வேண்டும்.
> அந்த உறவில் தான்
> நான் என்னை அறிகின்றேன்.

அனைத்தையும் பிரித்துப் பார்க்கும் சிந்தனை மேற்குலகில் இருந்தது. அந்தச் சிந்தனை இங்கு இறக்குமதி செய்யப்பட்டது. அதனால் நாமும் ஒன்றோடொன்று இயல்பாகவே இணைந்திருப்பதைப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தோம்.

### இன்றைய விஞ்ஞானம்

இன்று விஞ்ஞானமே மேற்கு நாட்டுச் சிந்தனையை சவாலுக்கு உட்படுத்தியுள்ளது. "இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துமே ஒன்றோடொன்று உறவு கொண்டுள்ளது" என்று புதிய விஞ்ஞானம் கூறுகின்றது. "உறவு" என்ற சொல்லை முதன் முறையாக விஞ்ஞானிகள் பயன்படுத்தியுள்ளமை வியப்புக்குரியது. ஆனால் மறுக்க முடியாத உண்மை.

இயேசுவின் நற்செய்தியை ஒரே ஒரு சொல்லில் சொல்வதானால் அது 'உறவு' தான். மனித உறவு, மனிதருக்கும் இயற்கைக்கும் உள்ள உறவு. மனிதருக்கும் கிரகங்கள், நட்சத்திரங்கள் - வானில் உள்ள பால்மண்டலுக்கும் உள்ள உறவுகள் என்று இந்த உறவு விரியும்.

கட்டிடக் காடுகளிடையே வானைத் தொடும் கட்டிடங்களில் அனைத்து வசதிகளோடும் வாழும் மனிதர்களுக்கும், எங்கோ ஒரு கிராமத்தில் உழுதுண்டு வாழும் மற்றவர்களை வாழ வைக்கும் உழவர்களுக்கும் ஓர் உறவுண்டு. இந்த உழவர் திருநாளில் இதை வலியுறுத்த வேண்டியது அவசியமாகின்றது. இருமை வாதம், சுயநலன்கள், ஈகோ எம்மைப் பிரிக்கக்கூடாது.

இன்று உழவர் கஷ்டப்படுகிறார்கள் என்றால், அவர்களின் கஷ்டத்தில் நாமும் பங்குகொள்ள வேண்டும். அவர்களது துன்பத்தில் எங்களுக்கும் பங்குண்டு.

### தை பிறந்தால் வழி பிறக்கும்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்றவொரு நம்பிக்கையை வளர்த்தவர்கள் உழவர்கள். இந்தத் "தை" ஆங்கில நாட்காட்டியில் வரும் தைத் திங்கள் அன்று. பொங்கலோடு வரும் தைத் திங்களையே, தை பிறந்தால் வழி பிறக்கும் என்று தமிழர்கள் சொன்னார்கள்: நம்பினார்கள். நடைமுறையில், ஒரு காலத்தில் அது உண்மையாகவும் அமைந்தது. அதாவது அறுவடை செய்து பொங்கலன்று நெல்விழைந்த பூமிக்கும், பால்தந்த மாட்டிற்கும், பருவ மழைக்கும், ஒளி தந்த கதிரவனுக்கும் நன்றி கூறினார்கள். அறுவடையில் பணம் வந்தது. அப்பணம் பிள்ளைகளைக் கரைசேர்க்க உதவியது. கடன்களை அடைக்க உதவியது. புதியன கொள்வனவு செய்ய உதவியது. இதனாலேயே, தை பிறந்தால் வழி பிறக்குமென்று நம்பிக்கையுடன் கூறினார்கள். பொங்கல் அன்று - தை 14ம் நாள் தமிழர்களுக்குத் தை பிறக்கின்றது. ஆனால், வழி பிறக்குமா?

நாட்டின் பொருளாதார நிலை, உரமற்ற நிலை, பொருட்களின் விலை வருவாய்க்கு மிகவும் மேலாக உள்ள நிலை, உழவைக் கைவிட்ட உழவர்களின் நிலை, அன்றாட வேலைக்கு ஊதியம் பெற்று வாழ்வோருக்கு அன்றாட வேலையற்ற நிலை என்று அடுக்கடுக்காகப் பார்க்கும் பொழுது வழி பிறக்குமென்ற நம்பிக்கை பிறக்கவில்லையே!

### பொறுப்புக்கூறுவது யார்?

இந்த நிலைக்கு இந்த நாட்டைக் கொண்டு வந்தவர்கள் யார்? கோவிட் தொற்று நோய் கடந்த இரு வருடங்களாகப் பொருளாதாரத்தைப் பாதித்ததை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், நாட்டின் இந்தப் பிச்சைக்கார நிலைக்குக் கோவிட்டை பலிக்கடாவாக்கக்கூடாது. பல வருடங்களாகப் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. இதற்குக் காரணம் யார்?

ஊடகவியலாளரும், அரசியல் விமர்சகர்களும், சில நாடாளுமன்ற உறுப்பினரும் கடந்த பல வருடங்களாக ஆட்சிசெய்து வந்த அரசியல்வாதிகளையே சுட்டிக் காட்டுகின்றார்கள். இந்த அரசியல் வாதிகள் பொறுப்பேற்பார்களா? இந்த நாட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடித்தவர்கள் யார்?

சுதந்திரம் பெற்ற நாள் தொட்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கடமைப்பட்டோர், தங்கள் சுய இலாபங்களுக்காக இனத்துவேஷத்தையும், மதத் துவேஷத்தையும் வளர்த்தவர்கள் யார்? இந்த அரசியல்வாதிகளை கோவில்களிலும், ஆலயங்களிலும், விகாரைகளிலும் இவ்நாளில் ஆசீர்வதித்த மதவாதிகள் யார்?

எழுபத்து நாலாவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் (தவறான சொல்) இவ் வேளை அனைவரும் கேட்க வேண்டிய கேள்விகள் பல. கேட்பார்களா? கேட்போமா?

அர்த்தமுள்ள ஆன்மீகம் 07

# இறைவனுக்கு செவிமடுத்தல்



அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

மின்காந்த அலைகள் வானவெளியில் நிறைந்துள்ளன. உண்மையில் நாம் அவற்றை உணர்வதோ கேட்பதோ இல்லை. ஆனால், தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள அலைவாங்கி அவற்றை ஈர்க்கும் போது, அவற்றின் இருப்பை உணர்கின்றோம். முற்றிலும் பழுதடைந்த தொலைக்காட்சிப் பெட்டியானால், முகத்தெதிரே பார்க்கவோ கேட்கவோ ஒன்றுமில்லை. இயங்கும் நிலையில் இருக்கிறதென்றால், எத்தனையோ பார்க்கலாம், கேட்கலாம். நெறிப்படுத்த வேண்டியவற்றைச் சரிப்படுத்தினால் நெஞ்சம் மகிழக்கண்டு களிக்கலாம். பரவிக்கிடக்கின்ற பாரெங்கும் இறைவன் அனுப்புகின்ற செய்திகளும் தகவல்களும் பார்க்கவில்லையே நாம்? கேட்கவில்லையே இன்னும்? பதிவாகவில்லையே நம் இதயத் தொலைக் காட்சியில்? தூய ஆவியை நோக்கி நமது இதய அன்ரனாவைத் திருப்பினால் துல்லியமாகக் கேட்கலாம் பார்க்கலாம். விவிலிய இறைவெளிப்பாடு என்பது இறைவன் மனிதனோடு பேசுவது. பவுலடியார் உரோ-10:17ல்

**"அறிவிப்பதைக் கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும் என்கிறார்."**

**மனிதன் இறைவனுக்குச் செவிமடுக்க வேண்டும்**

இறைவனுக்குரிய அதிகாரத் துடன் "கேளுங்கள்" என்று முழக்கமிடுகின்றனர் இறைவாக்கினர். ஆமோஸ் 3:1 "இஸ்ராயேல் மக்களே ! கேளுங்கள்........ ஆண்டவர் உரைக்கும் இந்த வாக்கைக் கேளுங்கள் " தன் சொந்த அனுபவத்திலிருந்து ஆண்டவரது கற்பனைகளின் அறிவிலிருந்து ஞானி இவ்வாறு கூறுகின்றார். நீதி 1:8 " பிள்ளாய் உன் தந்தை தந்த நற்பயிற்சியைக் கடைப்பிடி, உன் தாய் கற்பிப்பதைத் தள்ளிவிடாதே" கேட்பது என்பது இறைவனின் திருவுளத்தால் ஆட்கொள்ளப்படுவதற்கு என்று இணைச் சட்டம் 6:4 கூறுகின்றது. " இஸ்ரேயலே, செவிகொடு. நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத் தோடும் , உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக" இயேசு தாமே "கேளுங்கள்" என்று கூறுகின்றார். மாற்கு 4:3,9 "இதோ கேளுங்கள் ....... கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" கேட்பது என்பது உண்மையில் கவனமுடன் செவிமடுப்பது மாத்திரமல்ல, உள்ளத்தைத் திறப்பது. தி.ப.16:14 " பவுல் பேசியதை ஏற்றுக் கொள்ளுமாறு ஆண்டவர் அவர் உள்ளத்தைத் திறந்தார் என்று கூறுகின்றார்" இறைவார்த்தையை ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல அதை வாழ்வில் செயற்படுத்த வேண்டும். மத்: 7:24 "ஆகவே, நான் சொல்லும் இவ் வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயற்படுகின்ற எவரும் பாறையின் மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்" வார்த்தைக்கு ஏற்ப வாழ்க்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். பல சமயங்களில் இவ் வார்த்தை எங்கள் முன் பல வேண்டு கோள்களை முன்வைக்கின்றது. உரோ:1:5 " நற்செய்திப் பணிக்கென ஒதுக்கிவைக்கப்பட்டவன்"

ஆனால் விவிலியம் கூறுவதின்படி வருந்தத்தக்க நிலையில் மனிதன் இறைவனுக்கு செவிமடுக்க விரும்புவதில்லை. இணைச்சட்டம் 18:16,19 " நான் இறந்து போகாதபடி, என் கடவுளாகிய ஆண்டவரின் குரலொலியை இனி நான் கேட்காமலும் இப் பெரும் நெருப்பை இனி நான் காணாமலும் இருப்பேனாக..... என் பெயரால் அவன் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவனை நான் வேரறுப்பேன்" இதுவே மனிதனுக்கு விபரீதமாய் அமைந்துள்ளது. இறைவனின் வார்த்தையைக் கேட்பதற்கு அவனது காது மந்தமாயும் இதயம் கடினமாயும் போயுள்ளது. எரே:6:10 " நான் யாரிடம் பேசுவேன்?...... அவர்கள் காதுகள் திறக்கப்படவில்லை, அவர்களால் செவிகொடுக்க முடியாது" தி.ப.7:51 ஸ்தேவான் யூதர்களுக்குக் கூறியது போல " திமிர் பிடித்தவர்களே, இறைவார்த்தையைக் கேட்க மறுக்கும் செவியும் ஏற்க மறுக்கும் உள்ளமும் கொண்டவர்களே, உங்களுடைய மூதாதையரைப்போல நீங்களும் தூய ஆவியாரை எப்போதும் எதிர்க்கிறீர்கள்" இறைவன் பேசுவதை நாம் ஏன் கேட்க முடிவதில்லை?

1. புறத்தே எழுகின்ற பேர் இரைச்சல்கள்.
2. அகத்தே எழுகின்ற ஆர்ப்பரிப்புக்கள்.

**1. புறத்தே எழுகின்ற பேர் இரைச்சல்கள்:** திரைப்படங்கள், மொபைல் போன்கள், விளம்பரங்கள், தொலைக்காட்சிகள் என்பன நம் செவிகளிலும் எண்ணங்களிலும் இடி முழக்கம் செய்கின்றன. முடிவே இல்லாத போட்டிகள், புகழாசை, பணஆசை, தன்னலம், வன்முறை என்பவை முழக்கம் செய்து, மென்மையான இறைவனின் குரல் கேட்காதவாறு செய்கின்றன.

**2. அகத்தே எழுகின்ற ஆர்ப்பரிப்புக்கள்.** ஆசைகள், தேவைகள், கனவுகள், உந்துதல்கள், அடங்காத உணர்வுகள், அளவற்ற கற்பனைகள், அலைந்து கொண்டேயிருக்கின்ற உள்ளம் ஆகியவற்றின் முன்னால் ஆண்டவரின் குரல் வலுவிழந்துபோகின்றது.

1 அரசர் 19:12ல் அழகான ஒரு நிகழ்வைப் பார்க்கின்றோம். இடைவிடாத தமது உழைப்பும் வாழ்க்கையும் கடுகளவு பயனும் விளைவிக்கவில்லையே என்று மனமுடைந்து போய் இருக்கின்றார் இறைவாக்கினர் எலிசா. இடிமுழக்கத்திலோ, நிலநடுக்கத்திலோ, நெருப்பிலோ, புயலிலோ இறைவன் வராமல் எதிர்பாராத வேறு விதமாக வருகின்றார். எப்படி? இளந்தென்றலின் இனிய மெல்லிசையில்.

இந்த இறைவன் இன்று எப்படி நம்மிடம் வருகின்றார்? மறைநூல் வழியாக, வழிபாட்டின் வழியாக, அயலவரின் வழியாக, அன்றாட நிகழ்வுகள் வழியாக இறைவன் வந்து நம்மோடு பேசுகின்றார். திறந்த மனமும், ஆர்வமும், ஏற்கின்ற இதயமும் இருந்தால் உற்றுக் கேட்கலாம் மெல்லப் பேசும் அந்த இறைவனின் குரலை.


அன்பின் இறைவா!

✠ துணிவின்றி நாங்கள் துவள்கின்ற போது துணிவூட்டும் சொற்களைப் பேசும்.
✠ பல்வேறு வேலிகள் தாண்ட நாங்கள் விரும்புகின்ற போது விழிப்பூட்டும் சொற்களைப் பேசும்.
✠ ஆழமான காயங்களை வாழ்க்கை ஏற்படுத்தும் போது அருமருந்தான சொற்களைப் பேசும்.
✠ பொல்லாத சோதனைகள் முள்ளாக உறுத்தும் போது வெல்லும் வலிமையூட்டும் சொற்களைப் பேசும்.
✠ அன்றாட உழைப்பை ஏற்க, எந்தச் சுமையையும் தாங்க, ஆற்றல் ஊட்டும் சொற்களைப் பேசும்.
✠ எங்களுக்குத் தேவைப்படுகின்ற சொற்களை எல்லாம் இங்கே, இப்போதே பேசும்.

1 சாமுவேல் 3:9ல் கூறப்படுவது போல் " ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கின்றேன" என்று உம் திருமுன் நிற்கின்றேன்.

லூக் 1:38ல் கூறப்படுவது போல மரியன்னையுடன் சேர்ந்து " நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று பணிந்து நிற்கின்றேன்.

## பொங்குமா இப் பொங்கல்?




ச.சுலோச்சனா

## புதிய பாதையில் பயணிப்போம்

புத்தாண்டு பிறந்துள்ளது புதிய பாதையில் பயணிப்போம்
போலிகளை அகற்றிவாழ்வில் உண்மையாய் விளங்கிடுவோம்
வித்தான விவிலியம் விளம்பிடும் வழிகளைப் பின்பற்றி
விடுதலைக்காய் உலகில் பணிபுரியச் சங்கமிப்போம்
முத்தான அருளடையாளங்களை முறையுடன் பெற்றே
முடிவில்லா வாழ்வின் முன்சுவையை அனுபவிப்போம்
நித்தம் இறைவார்த்தை வாசித்துத் தியானித்தே
நிலைவாழ்வுப் பயணத்துக்கு சக்தி பெறுவோம்

திருத்துவ இறைவனே ஒன்றிப்பின் அடையாளம்
திருஅவை செய்திடும் நற்செய்தித் தூதுப்பணியும்
திருஅவையின் நல்வழி காட்டல்களையும் ஏற்று
திருவுடலின் உறுப்புக்களாய் திருப்பணிக்கு முன்வருவோம்
குருத்துவமே உலகினில் இறைவனின் பிரதிநிதித்துவம்
குணமாக்கும் மருத்துவம் என்பதை உணர்வோம்
கருத்தில்லாப் பேச்சுக்களில் ஏமாந்து அகப்பட்டு
காணாமல் போய்விடும் ஆடுகளாய் மாறிடாதீர்

உன்னை இறைவனே கருவினில் தெரிந்து கொண்டார்
உண்மைச் சமாரியனாய் நன்மை செய்திட முன்வர
தன்னைப் பெருமைப் படுத்துவோர் தாழ்நிலையடைவர்
தன்னலம் கருதாதவர் தலைவர்களாய் உயர்ந்திடுவர்
அன்னைதான் கடவுளின் அன்புக்கு அடையாளம்
அன்னையின்றி கரம்பற்றியோரே அனைத்துப் புனிதர்களும்
அன்னைமடி சரணடைவோம் அருள்வழி காட்டிடுவாள்

**அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்**

# காலத்தை வென்ற 'கலைத்தவசி' - குழந்தை செபமாலை

**ம**ன்னார் பிரதேசத்தினைத் தனது கத்தோலிக்க கலை இலக்கிய முயற்சிகளினாலும் தமிழ் தேசிய உணர்வலைகளினாலும், கலைச் செயற்பாடுகளினாலும், ஆசிரியத்துவத்தினாலும் அடையாளப்படுத்திக் கொண்டிருந்த ஆசிரியர் குழந்தை செபமாலை அவர்கள் 07.01.2022 அன்று தனது 82வது வயதில் இவ்வுலகை நீத்தார். தன்னை முழுமையாகத் தமிழ் கலையுலகிற்கு அர்ப்பணம் செய்த அவருக்குப் பாதுகாவலன் பத்திரிகை தனது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் இன்றைய கலைக் காவலனில் அவர் பற்றிய இக்கட்டுரையினை எழுதுவதில் நிறைவடைகின்றது

1939 ஆம் ஆண்டு மன்னார் முருங்கனில் பிறந்த இவர் ஒர் கூத்துப் பரம்பரையின் வாரிசு. அண்ணாவியார் செபஸ்தியான் இவரது தந்தையார், புலவர் மரியான் சந்தான் இவரது பெரிய தந்தையார். இவர்களது ஊக்கத்தினால் 10 வயதிலேயே கூத்தில் நடிக்கத் தொடங்கியவர். தனது இயலுமையின் காலம் மட்டும் 60 ஆண்டுகளுக்கு மேல் கலைச் சேவை செய்து வந்தார். ஆசிரியராக, அதிபராக கல்விப்பணி செய்து ஓய்வுபெற்றவர். ஒரு கலைஞனாக ஓய்வில்லாத பணிகளை ஆற்றினார். நாட்டுக் கூத்துக்கள், இலக்கிய நாடகங்கள் சமூக நாடகங்கள் எனப் பலவற்றையும் எழுதி நெறிப்படுத்தினார். தனக்குப்பின் ஒரு மாபெரும் சீடத்துவத்தினை ஏற்படுத்திச் சென்றிருக்கின்றார்.

**கலையின் தொடக்கமும் வளர்ச்சியும்**

சிறியவயதில் இருந்தே சுறுசுறுப்பும், சுட்டித்தனமும், மிடுக்கான தோற்றமும், மேன்மையான சிந்தனை, வேகமான நடை, விறுவிறுப்பான செயற்பாடுகள், கவர்ச்சிகரமான ஆளுமைத்திறன்கள், துடிப்பான தூரநோக்கு, போன்றவற்றோடு வளர்ந்து வந்த இவர் வாழ்நாள் முழுவதும் ஒரு முன்னுதாரணமான மனிதராகத் திகழ்ந்தார்.சிறியவயதிலேயே தனது தந்தையாரின் நாடகங்களில் நடித்ததனூடாக கலைத்துறைக்குள் காலடி எடுத்துவைத்தவர். முருங்கன் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற காலத்தில் பாடசாலையில் இசை, நாடக, நிகழ்வுகளிலே ஆர்வத்துடன் பங்குகொண்டு தன்னை வளர்த்துக்கொண்டார்.ஆசிரியராகி கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களால் புடமிடப்பட்டு சிறந்த ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் பல்வேறு இடங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றார். தனது கிராமத்திலும், கல்விப்பணி புரிந்த பாடசாலைகளிலும் மறை மாவட்டத்திலும் அவர் கலையை ஊடகமாகக்கொண்டு அளப்பரிய பணிகளை ஆற்றினார்.

முருங்கன் புனித யாகப்பர் கலா மன்றத்திற்கூடாகக் கலைப்பணியாற்றியவர் 1964 ஆம் ஆண்டு 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்' என்னும் ஒரு அமைப்பினை உருவாக்கி அதற் கூடாகப் பல்வேறு பணிகளையும் ஆற்றத் தொடங்கினார்.பல்வேறு கலைச் செயற்பாடுகளிலும் இவர் கால்பதித்துச் செயற்பட்டாலும் நாடகம் தான் இவரது ஆதார சுருதி. தான் மட்டுமன்றி தனது சகோதரர்கள், சகோதரிகள், மனைவி, பிள்ளைகள் என அனைவரையும் தன்னோடு உடன் பங்காளிகளாக்கிக்கொண்டு தனது பெறுமதி மிக்க நேரங்கள், பொருளாதாரம் போன்ற அனைத்தையும் பயன்படுத்தி நாடகக்கலைச் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்து 60வருடங்களுக்கு மேல் இடைவிடாது இயங்கி வந்த இவருக்கு நாடகம் ஒரு தவம் என்றுதான் கூற வேண்டும். அறுபதுகளுக்குப் பின்னர் மன்னாரின் நாடகமென்றால் அது 'குழந்தை மாஸ்ரரின் நாடகங்கள்தான்' என்று சொல்லுமளவுக்கு அவை மன்னார் மாவட்டத்திலும் மாவட்டம் கடந்தும் புகழ்பெற்றன. நாடகத்துறையில் நடிகனாக, நாடக ஆசிரியனாக,நெறியாளனாக,தயாரிப்பாளனாக, ஆர்மோனிய இசைக்கலைஞனாக பல்வேறு தளங்களிலும் இயங்கிய இவரது ஒவ்வொரு ஆளுமைகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவை.

**குழந்தை கையாண்ட நாடக வடிவங்கள்**

அறுபதுகளில் இருந்து பல்வேறு நாடகங்களையும் படைத்து வந்த இவர் தனக்கென்று தனியே ஒரு வடிவத்தினை கையாண்டவரல்ல காலத்தோடும் மக்களின் இரசனைகளோடும் சமூகத் தேவைகளோடும் இணைந்து நின்று அவ்வக் காலத்தில் நியமங்களாக புகழ்பெற்றிருந்த எல்லா வகையான நாடக வடிவங்களையும் கையாளக்கூடிய ஆளுமை பெற்றிருந்தார். அறுபதுகளுக்குப்பின் செல்வாக்குப் பெற்றிருந்த எல்லா நாடக வடிவங்களையும் இவர் பயன்படுத்தியுள்ளார். இவரது ஆரம்ப கால கட்ட நாடகங்கள் கலையரசு சொர்ணலிங்கம் வழி வந்த இயற்பண்பு சார்ந்த நாடகங்களாக இருந்தன. 'பாட்டாளிக்கந்தன்' 'இப்படியும் மனிதர்கள்' 'அல்லி' 'கண்ணகி', 'நல்வாழ்வு' போன்ற பல நாடகங்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இலக்கியக் கதைகள் வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட இந்நாடகங்கள் செம்மையான மொழிப்பாவனையில் இடையிட்ட பாடல்களோடு அமைந்திருந்தன. உதாரணமாக நல்வாழ்வு நாடகம், புனித யாகப்பரின் வாழ்வோடு தொடர்புடைய சில பகுதிகளைப் பேசுகின்றது. அவ்வாறே திமுக பாணியில் அமைந்த சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைவெளிப்படுத்துகின்ற எதுகை மோனைத் தமிழில் உரையாடல்கள் அமையப் பெற்ற நாடகங்களையும் எழுதினார். 'கண்ணகி', 'சிலம்பின் சிரிப்பு' 'இலங்கை கொண்ட இராஜேந்திரன்' போன்ற நாடகங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம் தமிழ்ப்பற்றினையும் சமூகச் சீர்திருத்தங்களையும் கொண்ட நாடகங்களாக இவை இருந்தன.

**நாட்டுக் கூத்துக்கள்**

மன்னார் மண்ணின் பெருமைக்குரிய வடிவமாகவும் குழந்தை செமாலையின் தனித்துவத்தினை அடையாளப்படுத்திய வடிவமாகவும் காணப்படுவது நாட்டுக்கூத்து ஆகும். பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கூத்துப் புத்தாக்க நடவடிக்கைகளால் தூண்டப்பெற்ற இவர் மன்னாருக்குரிய வடபாங்குக் கூத்துக்களில் அதிக கவனம் செலுத்தினார். இவர் எழுதி நெறிப்படுத்திய 'புனித செபஸ்தியார்', 'யார் குழந்தை' 'வீரனை வென்ற தீரன்' 'ஏகலைவன்', 'குண்டலகேசி', 'அன்புப்பரிசு', 'கைமுனு எல்லாளன்', 'சங்கிலியன்' 'கண்டி அரசன்', 'கல்சுமந்த காவலர்கள்' 'வீரத்தாய்'.. போன்ற பலவற்றினையும் குறிப்பிடலாம். இரண்டு இரவு முழு இரவு என்று நிகழ்ந்தமன்னாரின் கூத்துப் பாரம்பரியத்தில், நேரச் சுருக்கத்துடன் கட்டிறுக்கமான கதைசொல்லும் பாங்கினை முனைப் பாக்கி, நடிப்பு,அரங்க நுட்பங்கள் இசைச் செம்மை, ஆடல் கோர்வைகள் போன்ற பல நுட்பங்களையும் சிறப்பாகக் கையாண்டு கூத்துக்களுக்கு ஒரு பதிய முகத்தினைத் தோற்றுவித்தார். எளிமையானதும் அதேவேளை கவித்துவமானதுமான பாடல்கள் மூலம் சாதாரணர்களுக்கும் கூத்து விளங்கத்தக்க ஒன்றாக கூத்தினை மாற்றியுள்ளார். இவரது 'யார் குழந்தை' 'வீரத்தாய்' போன்ற கூத்துக்கள் இலங்கைக் கலைக்கழகம் நடத்திய போட்டிகளில் தேசியரீதியாக முதலிடங்களைப் பெற்றவை.



அவ்வாறே இசை நாடகங்களையும் எழுதியுள்ளார் 'சின்னவன் வென்றான்', 'வாழ்வளித்த வள்ளல்' 'கள்வனை வென்ற காரிகை' 'சிலம்பின் சிரிப்பு' போன்ற பத்திற்கும் அதிகமான இசைநாடகங்களை எழுதியுள்ளார். அவ்வாறே 'கண்ணகி' 'ஒளிபிறந்தது', 'இராமன் சீதை' 'வாழவைப்போம்' போன்ற நடன நாடகங்களையும் எழுதியுள்ளார். இவற்றினை விட சமகால யதார்த்த நாடகங்களையும் ஆக்கியுள்ளார். போர்க்கால வாழ்வியலை பல நாடகங்கள் வெளிப்படுத்தின. 'மெழுகுவர்த்திகள்' 'என்று தணியும் தாகம்', 'அழியா வித்துக்கள்' 'தொடரும் பயணங்கள்' போன்ற நாடகங்கள், தமிழ் தேசிய உணர்வலைகளுடன் எழுதப்பட்டவை மட்டுமன்றி, விடுதலைப்போராட்டத்திற்குத் துணை சேர்ப்பவையாகவும், போர்க்கால வாழ்வில் மக்கள் அனுபவித்த துயரங்களைப் பேசியவையாகவும் அமைந்தன.

**காவலூர் யோவான்**

ஒட்டுமொத்தத்தில் அவரது நாடகங்கள் விவிலியம் சார்ந்த கதைகளை யும், புனிதர்களின் வரலாறுகளையும், புராண இதிகாசக் கருப்பொருள்களிலும் வரலாற்றுக் கதைப்பொருள்களிலும், சமூகக் கதைப் பொருள்களிலும் அமைந்து ஈழத்தின் நாடக உலகிற்குக் கணிசமான முன்னீடுகளைத் தந்துள்ளன.

**கவிஞர் குழந்தை**

குழந்தை செபமாலை அவர்களை பலரும் நாடகக் கலைஞனாக இனங் கண்டாலும் அவர் நூறுக்கு மேற்பட்ட கவிதைகளை யாத்த கவிஞராகக் காணப்படுகின்றார். இவரது கவிதைகளைத் தாங்கிய நூலாக 'மாதோட்டக் கவிதைகள்' என்ற நூல் வெளி வந்தது. அதுமட்டுமன்றி கேட்டு வருபவர்கள் யாவருக்கும் இல்லை என்று சொல்லாது வாழ்த்துப் பாக்கள், கல்வெட்டுக்களைஎழுதிக்கொடுத்தார். மன்னார் மாவட்டத்தில் நடந்த பல பாராட்டு நிகழ்வுகள், முதற் திருப்பலிகள், எல்லாவற்றிலும் இவரது உணர்ச்சி மிகுந்த கவி வரிகளிலமைந்த வாழ்த்துப்பாக்கள் இசைக்கப்பட்டன. திருமண வைவங்களுக்குச் செல்லுகின்ற இவர் மணமக்களை வாழ்த்தி வாழ்த்துப் பாவினை எழுதி இசைத்து வாழ்த்தி வருவது வழக்கம். பாடசாலைகளுக்கும் பல்வேறு பாடல்களை யாத்திருப்பதுடன் வில்லுப்பாட்டுக்ள் போன்ற பலவற்றையும் எழுதியுள்ளார். அதுமட்டுமன்றி சிறந்த பேச்சாளனாகவும், சிறிய வயதில் இருந்தே தமிழரசுக்கட்சியின் கூட்டங்களிலும், தமிழ் எழுச்சி மாநாடுகளிலும் பங்கு கொண்டு உரையாற்றினார் காலிமுகத்திடலில் நடந்த சத்தி யாக்கிரகத்திலும் பங்குகொண்டார். பின்னர் அரசியலில் இருந்து விலகினாலும் தேசப்பற்றும் மொழிப்பற்றும் மிக்கவராகவே தன் வாழ்நாள் எல்லாம் திகழ்ந்தார்.

**ஆன்மீகப் பற்றாளர்**

தமிழிலும் கலையிலும் ஆர்வங் கொண்டவராகத் திகழ்ந்தாலும்ஆன்மீகத்திலும் ஆழமானவராகத் திகழ்ந்தார். அவரது சகோதரி எலிசபெத் அருட் சகோதரியாகவும், அவரது மகன் அருட்தந்தை அன்புராசா அவர்கள் அமலமரித் தியாகியாகவும், அவரது பெறா மக்களாகிய அருட்திரு தமிழ் நேசன், அருட்திரு விமல்ராஜ் போன்றவர்கள் குருத்துவத்திலும் துறவறத்திலும் அர்ப்பணித்திருப்பதானது அவரது ஊக்கத்தின் வழி என்பது குறிப்பிடத்தக்கது. இவர் வழிபாடுகளிலும் ஆலயப்பணிகளிலும் ஆர்வமாக ஈடுபட்டது மட்டுமன்றி, பசாம் பாடல்களையும் வியாகுலத் தருக்களையும் மிகச்சிறப்பாக இசைக்க வல்லவராகத் திகழ்ந்தார். தபசு காலத்தில் படிக்கப்படும் பசாம் பாடல்களை முதிர்ந்த வயதிலும் களைப்பின்றி பாட வல்லவராக இருந்தார்.

அதுமட்டுமன்றி இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியையும் எழுதி நெறிப்படுத்தியுள்ளார். இவரது கலைப் பணியைக் கௌரவித்து முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு அண்டகை அவர்கள் இவருக்கு 'திருக்கலைவேந்தன்' என்ற பட்டத்தினை அளித்துக் கௌரவித்தார்.

**பாராட்டுக்களும் கௌரவங்களும்**

ஏறத்தாழ அறுபது வருடங்களுக்கு மேல் கலைச்சேவையாற்றிய இவரது பணியைப் பலரும் உணர்ந்து பாராட்டி கௌரவித்துள்ளார்கள். இவர் எழுதிய 'பரிசுபெற்ற நாடகங்கள்' என்ற நாடக நூலுக்கு சாகித்தியமண்டலப்பரிசு வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி இவர் எழுதிய 'யாகப்பர் இன்னிசைப் பாடல்கள்', 'மரபுவழி நாடகங்கள்', 'மாதோட்டம் கவிதைத் தொகுதி' போன்றவை பலராலும் பாராட்டப்பெற்றவை. கிழக்குப் பல்கலைக் கழகம் இவருக்கு 'தலைக்கோல்' விருதினையும் கலாசார அமைச்சு 'கலா பூஷண விருதினையும்', மன்னார் ஆயர் 'திருக்கலை வேந்தன்' என்ற விருதினையும் வடமாகாண பண்பாட்டுத்திணைக்களம் 'ஆளுநர் விருதினையும்', இலங்கை கலாசாரத் திணைக்களம் 'நாடகக்கீர்த்தி' விருதினையும் வழங்கியுள்ளனர். இவற்றினைவிடவும், முத்தமிழ் வேந்தர், கூத்திசைக்காவலன் எனப் பல விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டன விருதுகளால் இவர் கௌரவம் பெற்றதை விட இவரால் விருதுகள் கௌரவம் பெற்றன என்று கூறுமளவுக்கு அவரது கலைப்பணி பலராலும் போற்றப்பட்டது.

ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு மேலாக கலையைத் தன் சுவாசமாகக்கொண்டு வாழ்ந்து சாதனை செய்திருக்கும் குழந்தை செபமாலை அவர்களின் கலைப்பணியானது சாதாரணமானதல்ல. இறைவன் தனக்களித்த தாலந்துகளை அதி உச்சமாகப் பயன்படுத்திய கலைஞனாகவும் கலைக்காக பலவற்றையும் இழந்தாலும் தன் மனைவி மக்கள் சகோதரர்கள் உறவினர்கள் என அனைவரையம் தன்னுடன் இணைத்துக் கொண்டு சவால்களையும் சிக்கல்களையும் ஆயுதமாக்கி, தான் கொண்ட குறிக்கோளைத் தளராத சக்திகளாக்கி சாதனை படைத்து நிற்கும் அவரது வாழ்வு ஒவ்வொரு கலைஞனுக்கும் முன்னுதாரணமானது. (தொடர்ச்சி 8 பக்)

# தமிழ் தைப்பொங்கல் விழாவும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களும்



அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்

**1. தை பிறந்தால் வழி பிறக்கும்.**

மனிதர்கள் எல்லோரும், எல்லா இனத்தவரும் மதத்தவரும் வேறுபாடின்றி, ஒரு புத்தாண்டை வரவேற்று நிருக்கின்றோம். எல்லா மனிதரும் ஒற்றுமையாக சமாதான மாக வாழ வேண்டுமென்று விரும்பி ஒருவரையொருவர் வாழ்த்தினோம். ஆனால் வாழ்த்துக்களுடன் மனிதர் விரும்பும் ஒற்றுமை சமாதானத்தை அடைய முடியாது. கிறிஸ்தவ கத்தோலிக்கரை பொறுத்த மட்டில், உலகையும் மனிதர்களையும் பண்பாடுகள் மதங்களையும் எவ்விதம் புரிந்து நாம் செயற்பட வேண்டுமென்று 2ம் வத்திக்கான் சங்க ஏடுகள் விளக்கியிருக்கின்றன. அத்துடன் தற் போதைய திரு அவைத் தலைவர் பிரான்சிசும் வழி காட்டுகின்றார். அவைகளை நடைமுறையில் பின் பற்றினால்தான் நிலையான ஒற்றுமை சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

**2. தமிழரின் பொங்கல் விழா**

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறும் தமிழர்களைப் பொறுத்த மட்டில், இம் மாதத்தில் தமிழர் கள் எங்கிருந்தாலும், பொங்கல் விழாவைக் கொண்டாடு கின்றனர். மனிதர் இயற்கையுடன் இணைந்து செய்த உழைப்பிற்கு இறைவன் வழங்கிய கொடைகளுக்காக நன்றி செலுத்தும் விழாவாகக் கொண்டாடுகின்றனர். இவ் விழா தமிழ் இனத்திற்குச் சொந்தமான ஒரு இன அடிப்படை விழாவாகும். இப்பேர்ப்பட்ட நன்றி விழாக்கள் பல நாடுகளில் இனத்தவரிடையே கெண்டாடப் படுவதை நான் கண்டிருக்கிறேன். ( Thanksgivings Day, Harvest Feast, Erntedankfest,). இதைத்தான் தமிழரும் பல நூற் றாண்டுகளாகத் தமக்குரிய முறையில் கொண்டாடி வந்தனர்.

**3. கிறிஸ்தவர்கள் பொங்கல் விழாவை மீளவும் கொண்டாடுகின்றோம்**

ஆனால் தமிழ்க் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், 16ம் நூற் றாண்டின் பின்பு கிறிஸ்தவர்களாக மதம் மாறிய பொழுது, தமிழ் இனத்திற்குச் சொந்தமான விழாக்களையும் தமிழ்-சைவ மதத்திற்குரியதாகக் கருதி, அவ் விழாக் களைக் கைவிட்டனர்.

அவைகளில்ஒன்றுதமிழரின்தைபொங்கல்விழா. பல நூற்றாண்டுகளாகப் பொங்கல் விழாவை தமிழ்-இந்து மக்களின் விழாவாகவே கருதினர். அவ்விழாவை இந்து-சைவ மக்களே கொண்டாடினர். தமிழ்க் கிறிஸ் தவர்கள், வாழ்த்துக்களுடன் மாத்திரம் நின்று விட்ட னர். இந்து-சைவ அயலவர் பொங்கலிலிருந்து அனுப் பியவைகளை வரவேற்கவில்லை. இந்துக்கள் நாம் கிறிஸ்தவராயினும், எம்மைத் தமிழராகக் கணித் தனர். ஆனால் நாமோ அவர்களையும் அவர்களுடைய பண்டிகையையும் கிறிஸ்தவத்திற்கு முரணானதாக கருதினோம்.

ஆனால் இவ் விழாவைத் தமிழ்க் கிறிஸ்தவ கத்தோலிக்கரும் இந்து-சைவ மக்களுடன் மகிழ்ச்சி யான வாழ்த்துக்களைப் பரிமாறுவதுடன், தமது கிறிஸ் தவ நம்பிக்கைக்கிணங்க வழிபாட்டையும் நடாத்தலாம் என 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின் ஒரு திருப்பலி விருந்தையும் நடாத்த வழி பிறந்தது. ( பூசைப் புத்தகம் - 1122 பக்.) வசதி இருப்பின், எமது ஆலயத்தின் முன்ற லில் கிறிஸ்தவ குழுமமாகக் கூடிப் பொங்கி, திருப்பலி விருந்தின் பின் பொங்கலையும் பகிர்ந்து கொள்ளலாம்.

இப்பேர்ப்பட்ட தவறான கணிப்பினால், 16ம் நூற்றாண்டில் தமிழர் கிறிஸ்தவர்களான பொழுது, தவறான முறையில் கைவிட்ட தமிழ் பழக்கவழக் கங்களை மீளவும் நம்முடையதாக ஆக்கிக் கொள்ள 2ம் வத்திக்கான் சங்கம் வழி திறந்திருக்கிறது.

**4. தமிழ்க் கத்தோலிக்கரின் முன்னேற்ற மான மாற்றங்கள்.**

ஆனால் 2ம் வத்திகான் சங்கத்தின் (1962-1965) பலனாக, கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் உலகம், மனித இனங்கள், கலாசாரங்கள் மதங்கள் பற்றிய புரிந்துணர் விலும் அணுகு முறைகளிலும் பல முன்னேற்றமான மாற்றங்களை ஊக்கப் படுத்தியது.

இந்த நவீன புரிந்துணர்வில் தமிழ் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கடந்த 60 ஆண்டுகளில் பல முன்னேற்றமான மாற்றங்களைச் செய்திருக்கின்றனர். நீண்ட காலமாக அந்நிய மொழியான இலத்தீனில் இயங்கிய திருஅவைகளும் வழிபாடுகளும் இன்று சுவை யான தமிழ்மொழியிலும், தமிழ் கலாசார முறைகளிலும் தமிழ் சங்கீதங்களுடன் நடைபெறுகின்றன. ஆனால் இப் பண்பாட்டு மயமாக்குதலுக்கப்பால், இன்னும் பல மாற்றங்கள் கோரப்படுகின்றன.

**5.பண்பாட்டு மயமாக்குதலுக்கு அப்பால் ஒற்றுமையான வாழ்வை நோக்கி**

இவைகளை வழி நடத்தத் தற்போதைய பாப்பரசர் பிரான்சிசும், இயற்கையுடனும், மனித இனங்களுடனும், மனிதர்களும் ஒரே இறைவனின் பிள்ளைகளாகவும் சகோதரர்களாகவும் வாழ்வதைப் பற்றிப் பல கருத்துக்களை முன்னெறித்தியிருக்கின்றார். இவைகளுக்கு இசைந்து தமிழ்க் கிறிஸ்தவ கத்தோலிக்கர் தமது புரிந்துணர்வையும் அணுகுமுறைகளையும் மாற்றுவது அவசியம்.

தமிழ் கிறிஸ்தவர்கள், மதம் மாறினார்களே ஒளிய இனம் மாறவில்லை. ஆகையால் 16ம் நூற்றாண்டில், தமிழர்கள் மதம் மாறிய பொழுது, பிழையாகக் கணித்து கைவிட்ட சில தமிழ் உரிமைகளை மீளவும் எம்முடையதாக்க முயற்சிக்க வேண்டும். ஏனெனில் நாம் இந்து-சைவ முஸ்லீம் சகோ தரர்கள் மத்தியில் வாழ்கின்றோம். ஆண்மைக் காலங்க ளில் எல்லா மதங்களுக்குள் இருக்கும் தீவிர வாதிகள் பிழையான கருத்துகளையும் விரோத சிந்தனைகளையும் பரப்ப முயலுகின்றனர். சரியான புரிந்துணர்வுடன் சகல மதத்தைச் சார்ந்தவர்களும் வாழ ஏதுவான கருத்துகளை வருங் காலத்தில் பரிமாறுவோம்.

---

# நமது அன்பியத்தில் நம் குழந்தைகள்

மனித வாழ்வு பல பருவங்களைத் தன்னகத்தே கொண்டது. ஒவ்வொரு பருவமும் சிறப்புக்குரியதாகவும். மகிழ்ச்சிக் குரியதாகவும் மலர்கின்றது. ஒவ்வொரு பருவத்திலும் பல அனுபவங்களைப் பாடங் களாக மனிதன் கற்றுக் கொள்கிறான், அந்த பாடங்கள் பல நேரங்களில் செதுக்கி, தேவையற்றதை நீக்கி, சிறந்த நிலங்களாக நம்மை பண்படுத்துகின்றன. பக்குவமடைந்த மனித வாழ்வில் குழந் தைப் பருவம் சிறப்பிடம் பெறுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனெனில் ஒரு முழு மனிதனைத் தாங்கிப் பிடிக்கின்ற வேர்களாக இருக்கக்கூடிய பருவமாகக் குழந்தைப் பருவம் இருக்கின் றது. திருத்தந்தை பிரான்சிஸ், இளைஞர்க ளுக்காக அண்மையில் வெளியிட்ட திருத் தூது ஊக்கவுரை "கிறிஸ்து வாழ்கிறார்." இந்த ஊக்கவுரையில் இளைஞர்களிடம் அவர் ஓர் வேண்டுகோள் வைக்கின்றார் "வேர்கள் பிடுங்கப்பட அனுமதிக்காதீர்கள்." **உங்கள் வேர்தான் நீங்கள்,** உங்களைத் தாங்குகின்ற வேர் உங்கள் வாழ்வில் தொடக்க காலம். குழந்தைப் பருவம் நம் வாழ்வின் வேர்.

**குழந்தைகள் – ஓர் பார்வை**

"படித்த பெரியவர்களிடமிருந்து அல்ல. மாறாக மாசற்ற சிறுவர்களிடமி ருந்துதான் நம் வாழ்வின் பெரிய பாடங் களைக் கற்றுக்கொள்ள படியும் என்பார் நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி அடிகள், குழந்தைகளில் தெய்வம் உறைந் திருக்கின்றார். எனவேதான் நம் முன் னோர்கள் அன்றே "குழந்தையும், தெய் வமும் குணத்தால் ஒன்று என்று கூறியிருக் கின்றார்கள், விவிலியம் "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் (திபா 127-3) என்று கூறுகின்றது. இறைவனுக்கு நிக ராகப் புகழப்படும் இறைவனால் போற்றப் படுகின்ற குழந்தைகளாக இருக்கின்றனர். இறைமகன் இயேசு அரிகமாக அவதகால நேசித்தார். பேர்களைப் பார்த்து குழந் தைகளாக மாறுங்கள் என்றார். "இயேசு அவர்களை நம்மிடம் வரவழைத்து," "சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள் அவர்களைத் தடுக்காதீர் கள் ஏனெனில் இறையாட்சி இத்தகை யோருக்கே உரியது. இறையாட்சியைச் சிறு பிள்ளையைப் போல் ஏற்றுக்கொள்ளா தோர் அதற்கு உட்பட மாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (லூக் 18:16-17) என்றார். "குழந்தைகள் குதித்தோடுகின்றனர் (யோபு 21:11) என்ற இறைவார்த்தை சொல்வதுபோல குழந்தை கள் மகிழ்ச்சியின் பிறப்பிடமாகின்றனர் அவர்கள் கள்ளம் கபடு, சூது, வஞ்சனை. பொறாமை அற்ற தூய உள்ளம் கொண்டிருக்கின்றனர், எனவே அவர் கள் இறைவனின் அன்புக்குரிய பிள்ளை கள், இயேசுவின் கண்மணிகள்.

**அன்பியத்தில் குழந்தைகள்**

திருஅவையில் நல்லுறவைப் பேணு கின்ற இடமாக இறைவார்த்தை அதிக மாகப் பேசப்படக்கூடிய வாழ்வாக்கப்படக் கூடிய இடமாக இருப்பது அன்பியம் நம் பிக்கை கொண்ட இறைசமூகமாக, திருத் தூதர் கற்பித்த வற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் (திப 2:42) நிலைக்கும் இடமாக அன்பி யம் இருக்கின்றது. நீங்களோ தேர்ந் தெடுக்கப்பட வழிமரபினர். அரச குருக்க ளின் கூட்டத்தினர். தூய மக்களினத்தினர். அவரது உரிமைச் சொத்தான மக்கள் (பேது 2:9) என்ற உண்மையை உணர்ந் தும் இடமாக இருப்பது அன்பியம்,அன்பி யத்தில் பல பொறுப்பாளர்கள், பொறுப்பு களைப் பகிர்ந்து, பொறுப்புணர்வோடு வழி நடத்தி, இயேசுவின் இறையாட்சிக் கனவு களை நடைமுறைப்படுத்த முயற்சி செய்கின்றனர். அதில் முக்கிய பங்காற்றக் கூடியவர்கள் குழந்தைகள், 2022 என்ற புதிய ஆண்டில் நுழைந்திருக்கின்ற வேளையில் நமது அன்பியத்தில் குழந் தைகள் இந்தக் கருத்துகளை வாழ்வாக்க முயற்சி எடுக்க குழந்தைப் பொறுப்பாளர்



வழிகாட்ட வேண்டும்.

**1.** சமூக ஊடகங்கள் இன்று குழந்தைகளை தம் இலக்காக்கி. வளருகின்ற குழந்தை களின் வளர்ச்சிக்கு மூடு விழா நடத்துகின் றன. தினந்தோறும் நம் குழந்தைகள் தொலைக்காட்சி பெட்டிகளுக்கு முன்னும், அலைபேசிகளுக்குப் பின்னும் அலைந்து திரிகின்றனர். குழந்தை பொறுப்பாளராகிய நாங்கள் எங்கள் அன்பியத்தில் எந்தக் குழந்தையும் அலைபேசியைத் தொடாமல் இருக்க விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். தொலைக்காட்சியில் பார்த்து மயங்கி தேவையற்ற பொருட்களை வாங்கித்தர நாங்கள் பெற்றோர்களை கட்டாயப்படுத்த மாட்டோம். தேவையில்லா ஆட்டம், பாட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகளில் பங் கேற்று எந்த குழந்தைகளுக்கும் மனச் சிதைவை ஏற்படுத்தமாட்டோம் என்று முயற்சி எடுக்கலாம்.

**2.** வேகமாக இயங்கிக்கொண்டிருக்கின்ற இந்த இயந்திர உலகில் பணம் மட்டுமே போதும் என்ற குறிக்கோளுடன். இரவு என்றோ, பகல் என்றோ பாராது அலைந்து பணம் சம்பாதிக்கும் பெற்றோர்களிடம், குழந்தைகளிடம் அமர்ந்து பேச, நேரம் செலவிடுவதனால் குழந்தைகள் பெறு கின்ற நன்மைகள், சக்திகள், வளர்ச்சிகள் பற்றி இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே குழந்தைகளாகிய நாங்கள் எங்கள் பெற் றோர்களிடம் எடுத்துக்கூறுவோம். பெற்றோர் களின் அன்பைப் பெற்று பெற்றோர் காட்டு கின்ற வழியில் நடக்கின்ற பிள்ளைகள் நல்ல கனி தரும் மரங்களாக இருப்பார்கள்,

அருட்பணி. S. இராஜ ஜெகன்,

**3.** இயற்கை இறைவன் கொடுத்திருக்கின்ற உன்னதமான கொடை, இறைவன் தன் இருப்பிடத்தைக்கூட, தான் படைத்த இந்த உலகில். இயற்கையில் அமைத்திருக்கின் றார். இயற்கையை நேசிப்பதும், மதிப்பதும் இறைவனை நேசிப்பது மதிப்பது போன்ற தாகும். இயற்கையை நாம் உதாசினம் செய்கின்ற போது, இறைவனையே நாம் அவமதிக்கின்றோம். ஓரிடத்தில் எழுதப் பட்ட வார்த்தைகள் "இறைவன் உங் களை மன்னிக்கலாம். இப்படியே போனால் இயற்கை உங்களை ஒருபோதும் மன் னிக்காது குழந்தை பொறுப்பாளர்களாகிய நாங்கள் இயற்கையைப் பேணுகின்ற விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவோம்.

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

# குடும்ப மறைக்கல்வியும் இக்கால தேவையும்

**1. முன்னுரை**

அவர் ஓர் அருட்பணியாளர். 25 ஆண்டுகளுக்கு மேலாகக் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கற்றுக்கொடுத்த பேராசிரியர். ஓய்வு பெறுகின்ற தனது கடைசிக் காலத்தில் மறைமாவட்டத்தின் கடைநிலைப் பங்குத்தளத்தில் பணிபுரிகின்றார். அவரது எளிய வாழ்க்கையைப் பார்த்து மக்கள் வியந்து பேசுகிறார்கள். ஒருமுறை தனது விசுவாச வாழ்க்கை அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கின்றபோது அவர் சொன்னது: "நான் சிறு வயதில் கத்தோலிக்க பள்ளியில் ஆரம்பக் கல்வியை கற்றேன். உயர்கல்வியையும், கல்லூரிப் படிப்பையும் துறவற சபை நடத்தும் புகழ்பெற்ற கல்லூரியில் பயின்றேன். ஏழு வருடங்கள் குருத்துவப் பயிற்சியைக் குருத்துவக் கல்லூரியில் பெற்றேன். 25 வருடங்கள் அதே குருத்துவக் கல்லூரியில் இறையியலைக் கற்றுக்கொடுத்தேன்.

இத்தளங்கள் எனக்கு ஏராளமான விசுவாசப் பயிற்சிகளைக் கொடுத்தன. பல விசுவாச கோட்பாடுகளையும், இறையியலையும் கற்றேன். எனது அறிவு பரந்து விரிந்தது. ஆனால் கண்களை மூடி இன்று எனது விசுவாச வாழ்க்கையைப் பார்க்கின்ற போது, மேற்சொன்ன அனைத்தும் என் நினைவிற்கு வரவில்லை . மாறாக, சிறுவயதில் என் தாய் தந்தை எனக்குக் கற்றுக்கொடுத்த சிறு செபங்களும், குடும்பத்தில் எனக்குக் கிடைத்த இறையனுபவமுமே என்னை இன்று இப்படி வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. எனக்கு உடல்நிலை சரியில்லாத தருணங்களிலும், குடும்ப பிரச்சினை நேரங்களிலும் எனது தாய் இரவு நேரங்களில் மண்டியிட்டுத் தனியாகச் செபிப்பார். படுக்கையில் படுத்துக் கொண்டு அதை நான் பார்ப்பேன். கண்களில் கண்ணீர் வரும். விடியற்காலையில் படுக்கையிலிருந்து எழுகின்றபோது முழங்கால்படியிட்டுச் செபிப்பார். இவைதான் நான் எங்கு சென்றாலும் திவ்விய நற்கருணை முன்பு முழங்கால் படியிட்டு செபிக்கும் பழக்கத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தன. செபத்தின் வலிமையைப் புரிய வைத்தன.

அருட்பணி. A. ஆரோக்கியசாமி

வயது முதிர்ந்த நிலையிலும் என் தந்தை திருப்பலியில் பங்கேற்க செல்வார். மற்றவர்கள் தன்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காக அல்ல. திருப்பலியில் பங்கேற்று தினமும் திவ்விய நற்கருணை உட்கொண்டால் கிடைக்கும் பலன்களை என்னிடத்தில் விவரிப்பார். இவைதான் சிறுவயதில் நானும் என் தந்தையோடு கைபிடித்துத் திருப்பலி செல்வதற்கும், பீடச் சிறுவனாக பணி செய்வதற்கும், பிற்காலத்தில் குருவாக திருப்பலியை மிகுந்த தயாரிப்போடு கொண்டாடுவதற்கும் துணைபுரிந்தன. நான் படித்த பள்ளி, கல்லூரி, குருமடம் எனக்கு விசுவாசப் பயிற்சியைக் கொடுத்தன. ஆனால் உயிருள்ள விசுவாசத்தை என் குடும்பத்தில். எனது பெற்றோர்களிடத்தில்தான் நான் கற்றுக்கொண்டேன்" என்று தனது அனுபவப் பகிர்வை முடித்தார்.

**2. குடும்பம் - ஒரு குட்டித் திரு அவை**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் குடும்பத்தை ஒரு குட்டித் திரு அவை என்று அழைக்கிறது. காரணம், ஒவ்வொரு குடும்பமும் திரு அவையின் சாயலாகவும். அதன் பிரதிபலிப்பாகவும் இருக்கிறது. திரு அவையின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் குறிப்பாக நற்செய்தி அறிவிப்பு. மறைக்கல்வி, இறைவேண்டல், பகிரும் வாழ்வு போன்றவை குடும்பத்திலும் நிகழ்கின்றன. மேலும் ஒரு குழந்தைக்கு விசுவாசத்தைக் கற்றுக்கொடுக்கும் முதல் பாடசாலையாகக் குடும்பம் இருக்கிறது. பெற்றோர்கள் தங்கள் செயல்களாலும் முன்மாதிரியாலும் குழந்தைக்கு விசுவாசத்தைப் போதிக்கும் முதல் ஆசான்களாக இருக்கிறார்கள்.நற்செய்தி மதிப்பீடுகள் அங்கே விதைக்கப்படுகின்றன. தவறு செய்யும்போது தனது தவறைத் திருத்திக் கொள்ளவும், மற்றவர் தவறு செய்யும்போது மன்னிக்கவும், தன்னிடம் இருப்பதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் குடும்பத்தில்தான் ஒரு குழந்தை கற்றுக்கொள்கிறது.



மேலும் நம் கடவுள் ஒரு குடும்பக் கடவுள். தந்தை மகன் தூய ஆவி என்று மூவொரு இறைவனில் குடும்பமாக வாழ்கின்ற கடவுள். படைப்பின் தொடக்கத்திலேயே ஆதாம் – ஏவாள் குடும்பத்தை படைத்தார். தனது மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற ஆபிரகாமின் குடும்பத்தை அழைத்தார். தனக்கு வேண்டியவர்களை அரசராக. இறைவாக்கினராக குடும்பத்திலிருந்துதான் அழைத்தார். எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை ஒரு குடும்பமாகத் தான் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்றார். இறுதியாக தனது ஒரே பேறான மகனைக் குடும்பத்தில்தான் பிறக்கச் செய்தார். குடும்பத்தில்தான் புனிதம் பிறக்கிறது, மனிதம் ஊற்றெடுக்கிறது.

**3. இன்றைய குடும்பங்கள்**

மாறிவரும் நவீன உலகில் இன்றைய குடும்பங்கள் பல்முனைத் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றன நுகர்வுக் கலாசாரப் பிடியும், பணத்தின் மோகமும், போலி தனிமனித சுதந்திரமும், கணவன் மனைவிக்கு இடையே பிரமாணிக்கமின்மையும், இதனால் ஏற்படும் திருமண முறிவும். கருக்கலைப்பும் குடும்பத்தின் புனிதத்தையும், மாண்பினையும் சீர்க்குலைத்து வருகின்றன. "நவீன கலாசாரம் என்ற பெயரில் சொந்த பந்தங்களை வெளியே அனுப்பிவிட்டு, தனி குடும்பங்களாக உறவின்றி இன்றைய குடும்பங்கள் தவிக்கின்றன. ஒரு காலத்தில் குழந்தைகளின் மழலை சத்தமும், தாய்மார்களின் கொஞ்சும் சத்தமும் வீடுகளில் கேட்டன. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## நமது அன்பியத்தில்...

( 6 ம் பக்கத் தொடர்ச்சி)

நெகிழியன் பயன்பாடு இல்லாத அன்பியத் திருஅவையாக எங்கள அன்பியத்தை உருவாக்குவோம், கடல் நீரை மாசுபடுத்தும் கட்டுக்கடங்கா மிதக்கும் நெகிழிகளைச் சேகரிப்போம். வீடுகள், பள்ளிகள், ஆலயங்களைச் சுற்றி அன்பிய உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் மரங்களை நட்டுத் தினந்தோறும் அதனோடு உரையாடுவோம்.

**இறுதியாக**

'குழந்தைகள், நாளைய தலைவர்கள் என்பார்கள். ஆனால் என் பார்வையில் 'குழந்தைகள் நாளை அல்ல, இன்றே தலைவர்களாகி விட்டார்கள். இன்றைய குழந்தைகளின் சிந்தனைகள், ஆற்றல்கள், திட்டங்கள், செயற்பாடுகள், வழிகாட்டுகின்ற நெறிமுறைகள், உதவி செய்கின்ற நற்குணம், பொதுநலம் பேணுதல் இயற்கையின் மீது உள்ள பாசம் போன்றவைகள் குழந்தைகளை இன்றைய தலைவர்களாக மாற்றிக்கொண்டு இருக்கின்றன. உருவத்தில் எப்படி இருந்தாலும், உள்ளத்தில் குழந்தைகளாய் இருப்போம். அதுவே நம்மை எப்போதும் உயிர்ப்புடன் வாழச் செய்யும்.

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும் பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கி யிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்

### அத்தியாயம் 4



**பழைய வாழ்க்கை முறையையும் புதிய ஆலய ஆராதனைகளையும் சேர்த்து தமிழ்க் கிறிஸ்தவர்களின் சமாளிக்கும் கிறிஸ்தவம்**

**4.3 இந்து ஆலயங்களுக்கும் கிறிஸ்தவர்களின் ஆலயங்களுக்கும் வேற்றுமையான பண்புகள்**

யூத மனிதனாகப் பிறந்து வளர்ந்த இறைமகன் இயேசுவின் போதனையும் சாதனையும் ஓர் புரட்சிகரமான மதத்தையும் ஆலயங்களையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டு வந்தது. கிறிஸ்தவர்கள் இறைவனின் பிரசன்னத்தை ஓர் கட்டிடத்திற்குள் அடக்கியவர்களல்ல. இஸ்ரவேலரைப் போல் ஜெருசலேம் ஆலயத்தில் மையப்படுத்தியவர்களல்ல.

கிறிஸ்துவின் சீடர்கள் தாங்கள் கூடுமிடத்தையே வசதிக்கேற்றவாறு தீர்மானித்தனர். அங்கே இறை வார்த்தையைக் கேட்டு உள்வாங்கவும், கிறிஸ்து மனித மீட்பிற்காக ஒப்புக்கொடுத்த பலிவிருந்தை நினைவு கூர்ந்து பங்கேற்கவும், ஒரு சகோதர குழுமமாகக் குருவுடன் கூடுவர், கொண்டாடுவர். இவ் விடங்கள் கிறிஸ்தவர்களின் அழைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முதன் முறையாக புனித சின்னப்பர் பர்ணபாஸ் இவர்கள் நடாத்திய குழுவினரே - கிறிஸ்தவர்கள் - என்ற நாமத்தைப் பெற்றனர். அவர்கள் கூடுமிடம் நிரந்தர தன்மை பெற்றது. இதன் காரணமாக, கூடுகிறவர்கள் சீடர்கள், அல்லது கிறிஸ்தவர்கள் என்றும், அவர்கள் கூடுமிடம் - குழுமத்தின் பெயரையே எடுத்தது. உதாரணமாக - அந்தியோக்க திரு அவைக்கூடகம் என்று அழைக்கப்படுகின்றது.

இதற்கிணங்க, திரு அவைகள் கூடுமிடத்தையும், முக்கிய ஐரோப்பிய மொழிகளில் திருஅவை என்றே அழைத்தனர். உதாரணமாக - The Church, l'Eglise, la Chiesa, die Kirche… ஆனால் தமிழ்க் கிறிஸ்தவர்கள் தாங்கள் கூடுமிடத்தை, திருஅவை கூடகம் என்று அழைக்காது, இந்து - சைவ சகோதரர் போல் கோவில் அல்லது ஆலயம் என்றே அழைத்தனர்.

கிறிஸ்தவ அவைகள் அமைப்புகளாக வளர்ச்சி அடைந் பின், பல அவைகளுக்குப் பொறுப்பாக ஒரு பிரதம குருவே ஆயர் என்ற பெயரில், தனது மறைமாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் கூடுமிடம் எல்லாவற்றிற்கும் தலைவரானார். பங்கு தந்தை, பூசாரியைப் போல் அல்லாது, அவ்விடத்தில் ஆயரின் பிரதிநிதியாக அங்கே வாழும் கிறிஸ்தவர் குழுமத்தின் வழிகாட்டியாகவும், ஆலய வழிபாடுகளின் தலைவராகவும் பணிபுரிவார்.

கிறிஸ்தவ ஆலயம் அல்லது கோவிலைப் பற்றி, இந்து - சைவ கண்ணோட்டம் நிலவுவதால், சாதிப் பிரச்சினை, உரிமைப் பிரச்சினை, வழிபாட்டில் பங்கு பற்றி வாசகங்கள் விசுவாசி மன்றாட்டுகள் சொல்வதற்கான உரிமை மறுக்கப்படுவது. இப்படியான பிரச்சினைகள் எழுகின்றன.

ஆகையினால் நாங்கள் கூடுமிடங்களை புதிய பெயர் கொண்டு மாற்றாது, புரிந்து கொள்ளுதல் ஆவது, கிறிஸ்தவ கோவில் ஆலயங்களையும், ஆயர், பங்குக் குரு, கிறிஸ்தவர்களின் உரிமைகளை சரியாக புரிந்து நடப்பதே சிறந்தது.

**4.4 தமிழ்க் கிறிஸ்தவர்கள் பழைய முறைகளை மாற்றாது சமாளிக்கும் பண்பையே விரும்புகின்றனர்.**

தமிழர் ஆதியிலிருந்து வாழ்ந்து வந்த வாழ்க்கை முறை வாழ்க்கைக்குத் தேவையான சகலத்தையும் மார்கா (margha) இந்து - சைவத்தில் கொண்டிருந்தது. இதிலிருந்து மதம் என்று ஒரு பகுதியைத் தமிழர் பிரிக்கவில்லை. ஆனால் கிறிஸ்தவத்தின் தன்மையும் வருகையும், தமிழர்கள் தமிழராக இருந்து கொண்டு, இன்னோர் மதத்தைப் பின்பற்றலாம் என்ற நிலைமையைத் தோற்றுவித்தது.

தமிழ் மக்களின் பரந்த மதத் தன்மை (Tamil Religiosity) காரணமாக, இனப்பற்று மொழிப்பற்று கலாசாரப் பற்று, அத்துடன் புதிய மதத் தேவையையும், சமாளிக்கும் தன்மை ஆகும்! (ability to compromise old ways with new demands).

தமிழ் இந்துக்கள், தமிழ் இஸ்லாமிய சகோதரர் போல் அல்லாது, ஒரே கணவன் ஒரே மனைவி உறவுகளைக் கொண்டவர்களாக இருந்தனர். ஆகையினால் தமிழ்க் கிறிஸ்தவர்களும் குடும்ப உறவி லும், நாளாந்த குடும்பச் சமூக வாழ்விலும், தமிழ் ஒழுக்க முறைகளைத் தொடர்ந்தனர்.

தமிழ்மொழி இலக்கியம், சங்கீதம் பரத நாட்டியம் போன்ற நல்ல அம்சங்களுடன், பல மூடநம்பிக்கைகளும் கலந்திருந்தாலும், பழக்க வழக்கங்களைக் தமிழ்க் கிறிஸ்தவர்கள் குடும்ப சமூக நிகழ்வுகளில் முன்போல முக்கியத்துவம் கொடுத்தனர்.

தமிழர், இந்து - சைவர்களாக சமூக வாழ்வில், மனிதரை சமத்துவ உரிமையுடைய சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளாதது போல, மதம் மாறிய தமிழ்க் கிறிஸ்தவர்களும் சாதி வேறுபாடுகளை, நுணுக்கமாக மிக ஆர்வத்துடனும், ஆவேசத்துடனும், குடும்பத்திலும் சமூகத்திலும் கடைப்பிடித்தனர். (தொடரும்....)

காவலன் கலசம்

# திருஅவையின் ஒன்றித்த உறவும் திருஅவைகளுக்கிடையேயான ஒன்றிப்பும்

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார சிறப்புக் கட்டுரை

அருட்பணி அ.பீ.திருமகன்

**முன்னுரை**

திருஅவையின் பணிகளுள் கிறிஸ்தவர்களுக்கிடையிலான ஒன்றிப்பு திருஅவையின் ஒன்றித்த உறவை விரிவுபடுத்துவதற்கு ஒரு முக்கிய ஊடகமாகத் திகழ்கின்றது. இந்த ஒன்றிப்பின் மூலம் எடுக்கப்படுகின்ற சாட்சிய வாழ்வும் மறைபரப்பும் கிறிஸ்துவால் திருஅவைக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவுறச் செய்வதாக அமைகின்றது. பிரிவுபட்ட நிலையில் கிறிஸ்துவை அறிவிப்பதைத் தவிர்த்து ஒன்றித்த உள்ளத்துடன், அவரைப் பாரெங்கும் பறைசாற்றும் பொழுது அது பூரணமான சாட்சிய வாழ்வாக மாறி, திருஅவை அது ஏற்படுத்தப்பட்ட நோக்கை நிறைவு செய்யக் காரணமாகின்றது (காண். கிறிஸ்தவ ஒன்றிப்பு எண் 1).

**1.கிறிஸ்துவின் திருஅவை**

தந்தையாம் இறைவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட கிறிஸ்து இறையரசைப் போதித்தார். இந்த 'நற்செய்திப் பணியைத் தொடர்ந்தாற்றவென அவர் திருஅவையை ஏற்படுத்தினார். இதுவே கிறிஸ்துவின் திருஅவை (Church of christ) உண்மையான அவரது மறையுடல், இது ஒன்றே. மக்களை மீட்புப் பாதையில் வழிநடாத்தும் கருவியும் இதுவே.

கிறிஸ்து ஏற்படுத்திய திருஅவை ஒன்று எனினும், இன்று பல திருஅவைகள் தோன்றியிருப்பதை காணலாம். கிறிஸ்துவின் திருஅவையின் பண்புகள் கத்தோலிக்க திருஅவையில் நிறைவாகவும், முழுமையாகவும், உன்னதமாகவும் உள்ளன. இயேசுக்கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும் திருத்தூதர்களை அடிக்கற்களாகவும் கொண்ட நற்செய்தி வழி திருவருட்சாதனங்களூடாகப் பேதுருவின் வழிமரபில் மக்களை மீட்பு நோக்கி அழைத்துச் செல்வது கிறிஸ்துவின் திருஅவை. இதனை கத்தோலிக்க திருஅவை உன்னதமான முறையில் கடைப்பிடிக்கின்றது.

கிறிஸ்துவின் திருஅவை என்றால், அது கத்தோலிக்க திருஅவையே என்ற கருத்து இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் மாற்றம் கண்டுள்ளது. அதாவது, கிறிஸ்துவின் திருஅவையின் சில பண்புகள் கத்தோலிக்க திருஅவையல்லாத ஏனைய திருஅவைகளிலும் உள்ளது. ஆனால், அவை நிறைவுள்ளதாகக் காணப்படவில்லை. ஆன்மீக மீட்புக்குரிய சில புனிதமான அம்சங்கள் இச் சபைகளில் காணப்படுகின்றன. தூய ஆவியாரின் செயற்பாடு ஏனைய சபைகளிலும் பரந்து கிடப்பது கண்கூடு. (காண்.கிறிஸ்தவ ஒன்றிப்பு எண் 4)

**2. கீழைத்தேச சபைகளுடன் கத்தோலிக்க திருஅவையின் உறவு**

திருஅவையின் வரலாற்றில் மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் எபேசு, கல்சிடோன் போன்ற பொதுச் சங்கங்களின் எதிரொலியாகக் கீழைத்தேசம், மேலைத்தேசம் எனத் திருஅவையில் பதினொராம் நூற்றாண்டில் பெரும் பிளவு ஏற்பட்டது. பலஸ்தீனம், துருக்கி, வட ஆபிரிக்கா போன்ற பிரதேசங்களில் கீழைத்தேச திருச்சபை நிலைத்தும் நீடித்தும் வருகின்றது. பல நூற்றாண்டுகளாகப் பிரிந்திருந்து ஒருவருக்கொருவர் எதிரிகள் என உறவை முறித்த இவர்கள், 1963 செப் 29ம் நாள் ஜெருசலேமில் பாப்பு 6ம் சின்னப்பர் கீழைத்தேச திருஅவையின் தலைவரான முதுபெரும் தந்தை அத்தனாகோரசை சந்தித்ததன் மூலம் தம் உறவைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.

**2.1 ஒற்றுமையும் வேற்றுமையும்**

கீழைத்தேச சபைகள் மிகவும் நெருங்கியவிதமாக கத்தோலிக்க திருச்சபையுடன் ஒன்றித்த பண்பினைக் கொண்டுள்ளன. திருத்தூதரின் வழிமரபில் ஊன்றித் திளைத்து திருவிவிலியத்தில் தம் வாழ்வினை அமைத்துள்ளனர். 'இறைமகன் கிறிஸ்துவே உண்மை மீட்பர்' என விசுவசித்து, நற்கருணையில் கிறிஸ்து உண்மையாகவே பிரசன்னமாயுள்ளார் என்பதை ஏற்கின்றனர். இத்தகைய விசுவாசமும் நம்பிக்கையும் கத்தோலிக்க திருஅவையில் உள்ளது போன்றே அங்கும் காணப்படுகின்றது.

கீழைத்தேச சபைகள் தனித்துவமான முறையில் திருத்தூதரின் படிப்பினைகள் வழிபாட்டுமுறைகள் என்பவற்றைப் பின்பற்றுகின்றனர்.

பல ஒன்றிந்த தன்மைகள் இரு திருச்சபைகளுக்குமிடையே காணப்பட்டாலும் கீழைத்தேச சபைகள் திருத்தந்தையை ஏற்பதில்லை. பேதுருவின் வழிமரபினராகத் திருத்தந்தையைத் தலைவராக ஏற்பது கத்தோலிக்க திருச்சபையின் முக்கிய பண்பாகும். ஆனால், இது கீழைத்தேச சபையில் இல்லை. இவர்கள் தங்கள் தலைவராக முதுபெரும் தந்தையரையும், ஆயர்களையும் நியமிக்கின்றனர். கீழைத்தேச சபைகளில் திருத்தந்தையை தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் கத்தோலிக்க கீழைத்தேச திருச்சபையாக உள்ளனர்.

**2.2 தற்போதைய உறவுநிலை**

இந்த இரு திருஅவைகளுக்கிடையிலான உறவு தற்போது வளர்ச்சி கண்டுள்ளது. இரண்டாம் வத்திக்கான சங்கத்திற்கு கீழைத்தேச சபைகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். திருத்தந்தை 6ம் சின்னப்பர் சில முக்கிய முதுபெரும் தந்தையருடன் உரையாடி விசுவாச அறிக்கையில் (Declarations) கையொப்பமிட்டார். இவ்வாறு முதுபெரும் தந்தையாகிய அபரியுனே பவுலூஸ் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரை 1993ம் ஆண்டு உரோமையில் சந்தித்தார். இவ்வாறான சந்திப்புக்கள் கிறிஸ்து இயலிலும், விசுவாசம், நற்கருணையிலும் இரு திருஅவைகளுக்கும் இடையிலான ஒன்றிப்பை ஆழப்படுத்தி வருகின்றன.

**3. ஏனைய பிரதான சபைகளுடனான உறவு**

3.1 பிரதான சபைகள் சில

மழைக்கு முன் பறந்து திரியும் ஈசல்கள் போல், பல புதுப்புதுச் சபைகள் கடந்த சில காலங்களில் பிறந்திருப்பது கண்கூடு. ஆனால் அவை அனைத்தும் திருச்சபைகள் என அழைக்கப்படத் தகுதியற்றவை. சில சபைகளே கத்தோலிக்க திருச்சபையுடன் உறவை ஏற்படுத்தக்கூடியனவாக உள்ளன. பிரதானமாக, சீர்திருத்தவாதியான மாட்டின் லூதரால் லூத்தரன் சபை 16ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரிந்த சபையாக நிறுவப்பட்டது. இது கல்வின், மெதடிஸ் போன்ற பல புரட்டஸ்தாந்து சபைகள் பிறக்கக் காரணமாகியது.

இவை தவிர 1534ம் ஆண்டு 8ம் ஹென்றி அரசனால் முதல் மனைவி இருக்க 2ம் திருமண அனுமதி மறுப்பினால் அங்கிலிக்கன் சபை (Church of England) ஆரம்பிக்கப்பட்டது. ஆசியாவில் தென் இந்திய திருச்சபையும் பிரதான திருச்சபைகளுக்குள் அடங்கும்.

## காலத்தை வென்ற ...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது கலைப்பயணத்தின் சவால்களை அருட்திரு தமிழ் நேசன் அடிகள் பின்வருமாறு கூறுகின்றார். "கலைஞர் குழந்தையின் கலையைலக சாதனைகள் பற்றிப் பலரும் வியந்து நயந்து பேசும் போது கலைக்காக அவர் கொடுத்த விலைபற்றிப் பெரும்பாலும் எண்ணிப்பார்ப்பதில்லை அவருடைய நீண்ட நெடிய கலைப்பயணத்தில் ஒருபக்கம் பேரும் புகழும் வந்து குவிந்தாலும் மறுபக்கம் அவர் சுமந்த சிலுவைகளும் சிக்கல்களும் அநேகம் அவர் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள்அவருக்கு அவ்வப்போது ஏற்பட்ட சுகவீனங்கள் அவருடைய கலை முயற்சிகளுக்குப் போதிய ஒத்துழைப்புக்கிடைக்காத போது அவர் அனுபவித்த மன அழுத்தங்கள் என அவர் நடந்த சிலுவைப்பாதையிலே சீரேனே ஊர் சீமோனாக அவருடைய துணைவியாரும் அவருடைய சிலுவைகளைத் தூக்கி நடந்தார்."


## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27 . 06 . 1939



மறைவு
30 . 01 . 2019

அமரர்
திருமதி அன்ரனெற் றோஸ்மலர் வேதநாயகம்
(மணி)

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"
(யோவான் ||:25)

AD 99

7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
02 . 08 . 1943



இறப்பு
25 . 01 . 2012

குருவாக : 20.11.1971

அருட்தந்தை ராஜசிங்கம் பீற்றர் துரைரெட்ணம்

இறை தந்தையின் அழைப்பை ஏற்று
எண்ணற்ற மக்களுக்குப் பணியாற்றி
இகமதில் இயேசுவின் சாட்சியானீர்கள்
இன்னமும் நினைக்கின்றோம்
இனிய உங்கள் வாழ்வுதனை
இளைப்பாறுங்கள் இறைவன் பாதம்

குடும்ப உறவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
01 . 11 . 1930



இறப்பு
29 . 01 . 2021

அமரர் பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா

என்றும் எம்முன் வாழும் அப்பா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடினாலும்
எம்மையெல்லாம் அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும்
அரவணைத்து வழிநடத்திய அந்த நாட்கள்!
உங்கள் அறிவுரைகள், அரவணைப்புகள்
பாச நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில்
நிழலாகத் தொடர்ந்து உயிர்வாழும் அப்பா!
உங்கள் ஆன்மா இறைவனின் அமைதியில்
இளைப்பாற நித்தமும் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
01 . 11 . 1948



இறப்பு
09 . 01 . 2021

அமரர் தம்பிஜயா ரூபன் இன்பராஜா
(இன்பம்)

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.
(2 திமோத்தேயு 4:7)

ஆண்டொன்று ஓடினாலும் மறவோம் உம் அன்பை
ஆறாது எம் துயரம் உம் நினைவு இருக்கும்வரை
உங்கள் ஆன்மா இறைவனில் மகிழ்ந்திருக்க
நிதமும் இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்

உயரப்புலம், ஆனைக்கோட்டை

குடும்பத்தினர்

# படைப்பு ஆசீர்வாதமாகட்டும்!

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி.

*"கடவுள் நல்லவர், அவரிடமிருந்து வரும் அனைத்தும் நல்லவை"*

– பின்யென் கில்டகார்ட்.

*"சடம் சார்ந்ததும் ஆன்மீகம் சார்ந்ததுமே ஆசீர்வாத மாகும். முதலில் ஆசீர்வாதம் வாழ்விற்கானது, சுகத்திற்கானது, மனிதர், கால்நடை, வயல்கள் பலுகிப் பெருகுவதற்கானது."*

– சிக்மன்ட் மொவின்கல்

*"எம்மைப் பற்றியது எல்லாம் அழகே! அதைப் பற்றிப் பலர் குருடாயுள்ளார்கள். வாழ்வின் எளிமை பற்றி, இயல்பு பற்றி, அமைதி பற்றி மக்கள் கவனம் எடுப்பதில்லை."*

– பப்லோ காசால்ஸ்

*"வானகமும் வையகமும் எல்லாப் படைப்புக்களுமே மகத்தானவை, அழகானவை, நல்லவை. எல்லாப் படைப்புக்களும் இறைவனின் நன்மைத் தனத்தால் நிரம்பியவை. கடவுள் நன்மைத்தனமானவர். நன்மைத் தனமானவை எல்லாம் கடவுளே!"*

– நோர்விக் யூலியன்

படைப்பாற்றல் சக்தி எப்பொழுதும் உயிரூட்ட முள்ள முறையில் படைத்த வண்ணமே உள்ளது. அது ஆசீர்வாதமாகத் தொடர்ந்து ஊற்றெடுத்த வண்ணம் உள்ளது. படைப்பிற்கும் ஆசீர்வாதத்திற்கும் முற்றுப் புள்ளி இல்லை. பெற்றோர் தம் பிள்ளைகளை அன்பு செய்வதுபோல் கடவுள் தாம் படைத்த அனைத்தையும் நிபந்தனையின்றி அன்பு செய்தவண்ணமே உள்ளார்.

"ஆண்டவருடைய செயல்கள் அனைத்தும் எத்துணை விரும்பத்தக்கவை! பார்ப்பதற்கு எத்துணை பளபளப்பானவை! இவையெல்லாம் உயிரோடிருக்கின் றன. எல்லாத் தேவைகளுக்காகவும் நிலைத்திருக்கின் றன எல்லாம் அடிபணிகின்றன" (சீராக். 42:22,23,25).

ஆசீர்வாதம் உறவு சார்ந்தது. ஆசீர்வதிக்கும் நல்லவர் தன்னிடம் சிறப்பாகக் காணப்படும் ஒன்றைக் கொடுத்தே மகிழுவார். உறவுப் பரிமாற்றம் சீராய் இங்கு இடம்பெறும். அணுவிலிருந்து அணுவிற்கும் மூலக்கூறிலிருந்து மூலக்கூறிற்கும் உயிரியிலிருந்து உயிரிக்கும் மண்ணிலிருந்து செடிகளிற்கும் செடிகளி லிருந்து விலங்குகளுக்கும் விலங்குகளிலிருந்து மனிதர்க ளுக்கும் ஆசீர்வாதம் தொடர்கதையாகத் தொடருகின்றது. இரட்சணிய வரலாறு ஆசீர்வாதத்தின் வரலாறாகவே விளங்குகின்றது. உடன்படிக்கையின் ஆண்டவர் ஆசீர் வாதத்தின் ஆண்டவராவார். நன்மைத்தனங்களை, நல்ல நிலங்களை, நலம்மிக்க பிள்ளைகளை, முழு மையான வாழ்வினை ஆண்டவர் ஆசீர்வாதமாகப் பொழிந்தார். இந்த அளப்பரிய ஆசீர்வாதங்களுக்கு இஸ்ராயேலர் நன்றி நவின்றார்கள்.

"உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களை வளமிகு நாட்டிற்கு அழைத்துச் செல்கிறார். அந்த நாடு பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலும் பாய்கின்ற ஆறு களையும் ஊற்றுக்களையும் ஏரிகளையும் கொண்டது. அந்த நாட்டில் பஞ்சமின்றி நீங்கள் அப்பம் உண்பீர்கள். நீங்கள் உண்டு நிறைவு கொள்வீர்கள். அப்போது வளமிகு நாட்டை உங்களுக்குக் கொடுத்தற்காக கடவு-ளாகிய ஆண்டவரைப் போற்றுவீர்கள்" (இணைச்சட்ட நூல் 8:7-10).

ஆசீர்வாதம் என்பது யாவே ஆண்டவர் மூலமாக எகிப்திய அடிமைத்துவத்திலிருந்து உண்மையான விடுதலையை அனுபவித்த இஸ்ராயேல் மக்களுக்கு வெறும் வெற்று நிகழ்வு அல்ல, மாறாக அவர்கள் இணைந்து வாழ்வதால் வரும் வாழ்வியற் பெறுமதி.

விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாம் இறைவனால் நிறைவாக ஆசீர்வதிக்கப்பட்டார். ஆண்ட வர் ஆபிரகாமை நோக்கி, "உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலி ருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்கு வேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயோ ஆசியாக விளங்கு வாய். உனக்கு ஆசி கூறுவோருக்கு நான் ஆசி வழங்கு வேன். உன் வழியாக மக்கள் இனங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்றார் - (தொடக்க நூல் 12:1-3).


"ஆண்டவரின் மாட்சி என்றென்றும் நிலைத் திருப்பதாக. அவர் தம் செயல்களைக் குறித்து மகிழ் வாராக. நான் வாழும் நாளெல்லாம் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன். என் உயிர் உள்ள வரையும் என் கடவுளுக்குப் புகழ் சாற்றிடுவேன்." "மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பிவரச் செய்து, விதைப் பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவை யும் கொடுக்காமல் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே என்வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக் கும். அது என் விருப்பத்தைச் செயற்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை" (எசாயா 55:10-11).

பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட பெண்ணாக அன்னை மரியா எலிசபேத்தால் போற்றிப் புகழப்பட்டார். "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உன் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றி னுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்று எலிசபேத் சொன்னார். (லூக்கா 1:43-45).

நாளாந்தம் நல்வாழ்த்துக்கள் கூறி ஆளை ஆள் வரவேற்பது மகிழ்வுக்குரிய விடயமாகும். நாம் விரும்பி யோருக்கு மட்டும் ஆசி கூறாமல், பாரபட்சம் பாராது, எல்லோருக்கும் நல்லாசி அருளுவது மேன்மைக்குரிய வர்களின் இயல்பாகும்.

"இன்னா செய்தாருக்கும் நன்னயம் செய்து நாணி டச் செயல்" என்று திருவள்ளுவர் சொல்வது எமக்கு எதிராகக் குற்றம் செய்வோர் நாணும்படி அவர்களுக்கு நன்மை செய்துகொண்டு இருப்பதாகும்.

"ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு" என்று இயேசு சொல்வது, தீமைக்குத் தீமை, வாளுக்கு வாள் என்ற போக்கிலிருந்து விடுபட்டு எல் லோருக்கும் இன்முகம் காட்ட வேண்டும் என்பதாகும். மனிதர் அனைவருக்கும் பேரன்பைக் காட்டும் பரம்பொருள் பெயரால் புவியில் வாழும் எல்லோருக்கும் நன்மைகள் செய்து, நற்செய்தி சொல்லி, இயேசுவின் பெயரால் ஆசிர் வழங்கிடுவோம்.



# தொடரும் 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

## நம்பிக்கை அறிக்கை இரண்டாவது பிரிவு

**41. இயேசுக்கிறிஸ்துவில் எத்தனை இயல்பு கள் காணப்படுகிறது?**

இயேசுக்கிறிஸ்துவில் இரண்டு இயல்புகள் காணப்படுகிறது: இறை இயல்பு, மனித இயல்பு.

**42. இயேசுக்கிறிஸ்துவில் ஒரு ஆள் தன்மையா காணப்படுகிறது?**

ஆம், இயேசுக்கிறிஸ்துவில் ஒரு ஆள் தன்மையே காணப்படுகிறது. அதாவது இறைமகன் என்னும் ஆள் தன்மை ஆகும்.

**43.ஏன் இறைமகன் மனிதனானார்?**

இறைமகன் மனிதனைப் பாவத்திலிருந்தும் பாதாளத்திலிருந்தும் மீட்பதற்காகவும் விண்ணுல கிற்கான பாதையைக் கற்பிப்பதற்காகவும் மனித னானார்.

**44. இயேசு என்னும் புனிதமான பெயர் குறித்துக்காட்டும் பொருள் என்ன?**

இயேசு என்னும் புனிதமான பெயர் மீட்பர் என்னும் பொருளைக் குறித்துக் காட்டுகிறது. "அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில், அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" (மத்தேயு 1:21).

**45. கிறிஸ்து என்னும் பெயர் குறித்துக் காட்டும் பொருளென்ன?**

கிறிஸ்து என்னும் பெயர் குறித்துக் காட்டும பொருள் திருப்பொழிவு செய்யப்பட்டவர் என்பதாகும்.

**46. இயேசு எங்கே இருக்கிறார்?**

இயேசுக்கிறிஸ்து இறைவனாவார், எனவே அவர் எங்கும் இருக்கின்றார்.

**47. இறைவன் வாக்களித்த மீட்பர் யார்?**

இயேசுக்கிறிஸ்து.

**48. இயேசுக் கிறிஸ்து என்னும் பெயருக்குப் பொருள் என்ன?**

இயேசு என்பதற்கு மீட்பர் என்றும், கிறிஸ்து என்பதற்கு அருட்பொழிவு பெற்றவர் என்றும் பொருள் ஆகும்.

**49. இயேசு எந்த நாட்டில் பிறந்தார்?**

பாலஸ்தீன் என்னும் இஸ்ரயேல் நாட்டில் பிறந்தார்.

**50. இயேசு எந்த ஊரில் பிறந்தார்?**

பெத்லகேம் என்னும் ஊரில் பிறந்தார்.

**51. இயேசுவின் தாய் யார்?**

எப்பொழுதும் கன்னியான புனித மரியா.

**52. இயேசு கன்னி மரியாவிடம் எப்படிப் பிறந்தார்?**

தூய ஆவியாரின் வல்லமையால் வியத்தகு முறையில் கருவாகி, இயேசு மனிதராகப் பிறந்தார்.

**53. இயேசுவின் தந்தை யார்?**

இறைவனே இயேசுவின் தந்தை. புனித யோசேப்பு அவருடைய வளர்ப்புத் தந்தை மட்டுமே.

**54. இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றி நாம் அறிவது என்ன?**

1) இயேசு பிறந்த நாற்பதாம் நாள் கோவிலில் அர்ப்பணிக்கப்பட்டார்.
2) நாசரேத்தில் வளர்ந்து வந்தார்.
3) தம் தாய் தந்தையருக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தார்.
4) தம் பன்னிரண்டாம் வயதில் போதகர் நடுவில் கற்பித்தார்.
5) ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.

(தொடரும்..)

## காவலன் கலசம்



# வரலாற்றில் ஒரு தலைவர்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

### முன்னுரை

காலனித்துவ ஆட்சியும் ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களின் ஆளுகையும் கைமாறியதொரு கடந்து செல்லும் 'பதின்ம வயது' வரலாற்றின் தலைவராக யாழ். கத்தோலிக்கத் திருஅவையை இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து ஏறக்குறையக் கால்நூற்றாண்டு காலமாக வழிநடத்திய ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின் (1901 - 1972) தலைமைத்துவம் இக்காலத்தில் இலங்கைத் திருஅவைக்குக் கிடைத்த உறுதியான தலைமைத்துவமாகும். பிரித்தானிய ஆட்சியின் பின்பு இலங்கை அனுபவித்த தேசியமயமாக்கலின் முரண்பாடுகள் மத்தியில் இத்தீவிற்குக் கிடைத்த தூரநோக்குடன்கூடிய தலைமைத்துவமாகும். சுதேச மயமாக்கலின் பிரசவ வேதனைகள் நிறைந்த நிலையில் இருந்த யாழ் மறை மாவட்டத்திற்குக் கிடைத்த மதி நுட்பமிக்க தலைமைத்துவம் ஆகும்.

யாழ். மறைமாவட்டத்தை இவர் பொறுப்பேற்ற 1950 - 1957 வரையான ஏழு ஆண்டு காலத்தை ஓரளவு மகிழ்ச்சியான காலமாகவும் 1958 - 1965 வரையான எட்டு ஆண்டுகளைக் கடந்து செல்லும் முரண்பாடுகள், சவால்கள், திருப்பங்கள் நிறைந்த ஆண்டுகளாகவும் எஞ்சிய 1966 - 1972 வரையான மிகுதி ஏழு ஆண்டுகளிலும் புதிய உத்வேகங்களுடன் பழமைவாதிகளின் விமர்சனங்கள், புதுமை விரும்பிகளின் வரவேற்புக்கள் மத்தியில் வீறுநடைபோட்ட காலமாகக் கொள்ளலாம்.

### தலைமைத்துவத்தின் விளைநிலம்

போர்த்துக்கேயர் காலம் முதல் ஒல்லாந்தர் காலம் வரை வட இலங்கையின், முதல் மறைசாட்சியத்தளங்களாக முறையே மன்னாரும், யாழ்ப்பாணமும் விளங்கின. இக்கத்தோலிக்க பாரம்பரியத்திற்கு அணி சேர்த்தாற் போல் இலெய்டன் தீவு எனப்படும் வேலணைப் பெருநிலப்பரப்பில் உள்ளடங்கிய ஊர்காவற்றுறை என்னும் பாரம்பரியப் பிரதேசம் அமைந்துள்ளது. தனது மதத்தின் உறுதிப்பாட்டின் சான்றாக எமிலியானுஸ்பிள்ளையை முதன்மையாகக் கொண்டு இத்தீவுப்பகுதியானது 1950 முதல் இன்று வரை ஆறு சுதேச ஆயர்களை, யாழ்ப்பாணம், மன்னார், திருகோண மலை, மட்டக்களப்பு மறை மாவட்டங்களில் பணிபுரிய வழங்கியுள்ளது.

கரம்பொன் கிராமத்தின் அந்தோனிப்பிள்ளை ஜேக்கப்பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், நீர்கொழும்பின் வென்னப்புவக் கிராமத்தில் வசித்து உல்லட்டியா தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். அந்தோனிப்பிள்ளை ஜேக்கப்பிள்ளை, இறப்பியேல் ஆனாப்பிள்ளை தம்பதிகளின் ஐந்தாவது பிள்ளையாக, எமிலியானுஸ்பிள்ளை 1901 யூலை 20 சனிக்கிழமை உல்லட்டியாவில் பிறந்தார். உல்லட்டியா புனித சவேரியார் ஆலயத்தில் அருட்பணி. ஜே.ஜே..மக்கார்த்தி அ.ம.தி. யால் திருமுழுக்காட்டப்பட்டார். நான்காவது மகன் பெனடிக்ற் வென்செஸ்லாஸ் 29 வயதில் இறந்து போகத் துணைவியாரின் இழப்புடனும் தனது ஆசிரியப் பணி ஓய்வுடனும் தந்தையார், எமிலியானுஸ்பிள்ளை, பீற்றர்பிள்ளையுடன் கரம்பனில் குடியேறினார். எமிலியானுஸ்பிள்ளை 1912 ஜனவரி வரையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் 1912.02.06 - 1913.12.22 வரை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

### "பிள்ளை" குடும்பப் புத்தி ஜீவிகளின் ஆளுமை

அமலமரித்தியாகிகள் சபையின் நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் இலங்கை மறைப்பணியில், ஊர்காவற்றுறையின் ஒரேயொரு தனிக்குடும்பத்தைச் சேர்ந்த 'பிள்ளை சகோதரர்கள்' மூவர் இணைந்து அறுபது ஆண்டுகள் பணியாற்றியுள்ளனர். அம்மூவரும் அருட்பணி. ஜோசப் கயித்தான்பிள்ளை, ஆயர் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை, அருட்பணி. பீற்றர் அல்காந்திராப்பிள்ளை ஆவார். இது பிள்ளை குடும்பத்தினரின் அர்ப்பணமிக்க ஆளுமைக்குச் சான்றாகும். 1914 ஜனவரியில் ஆரம்பமாகிய ஏழாம் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் வரையும் இவரது சகோதரன் லூக் கிறகரி அருட்சகோதரரின் டிலாசால் சபையினர் நடாத்திய கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியில் கல்வி கற்றமையும் 1924.04.24 இல் குருத்து ஞாயிறு அன்று நிகழ்ந்த முதல் சகோதரன் யோசப் கயித்தான்பிள்ளையின் அர்ப்பணமிக்க சாவும், இறைபணிக்கு அர்ப்பணிக்குமாறு இவரையும் தூண்டியது.

கொழும்பு பொரளையில் இரண்டாவது சகோதரர் ஸ்ரனிஸ்லொஸ் 1913 முதல் குடியிருந்த வீட்டில் கிடைத்த குடும்ப உறவின் சங்கமம், இவரது இளமைப் பருவத்தை வளப்படுத்தியது. ஸ்ரனிஸ்லொஸின் துணைவியார் அந்தோனிப்பிள்ளை திரேசியாவின் பராமரிப்பில் முதிய தந்தையாரின் ஆலோசனை-யோடும் இளையவர் பீற்றர்பிள்ளையின் விளையாட்டுத் துணையோடும் இவர் அங்கு தனது இளமைக் காலத்தைக் கழித்த போது சிங்கள மக்கள் மற்றும் துறைசார் தலைவர்களுடனும் நல்லுறவை வளர்த்துக் கொண்டார். 1924இல் கொழும்பில் நிகழ்ந்த கொள்ளை நோயில் இறந்த கயித்தான்பிள்ளையின் சாவும் உடன-டியாக நான்கு நாட்களுக்குள் அதே தொற்று நோயில் புனித வியாழன் அன்று (1924.04.28) இறந்த தந்தையின் சாவும் (எமிலியானுஸ் பிள்ளைக்கு வயது 21) பணிவாழ்வில் தம்மை ஏற்கெனவே ஈடுபடுத்தியிருந்த மூத்தவர்களைவிட இவரது பதின்ம வயதில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இளையவர் விளையாட்டுப் பிள்ளையாக இருந்தார். ஆயினும் மூத்த சகோதரர்களின் ஆலோசனைகள் கைகொடுத்தன.

### 'பிள்ளை குடும்ப' முதன்மையானவர்களின் ஆளுமை

ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இலங்கை நாடு விடுதலையடைந்து ஐரோப்பிய ஆளுகையிலிருந்து இலங்கைத் திருஅவை சுதேசமயமாக்கப்படவிருந்த வேளையில் தேசியமட்டத்திலும் திருஅவை மட்டத்திலும் ஐரோப்பியர்களிடமிருந்து பொறுப்புக்களைக் கையேற்றுப் பணியாற்றிய முதல் சுதேசிகளாக இவர்கள் விளங்கினர். முதன்மையானவர்கள் என்று கூறும் போது, கயித்தான்பிள்ளை அ.ம.தி., சிறந்த அறிவாளியாகவும் கொழும்பு புனித யோசேப்பு கல்லூரி மாணவர்களின் சிறந்த ஆன்மிக இயக்குனராகவும் திகழ்ந்தார். ஸ்ரனிஸ்லொஸ், இலங்கை அரசாங்க நிதியமைச்சில் ஆலோசகராகவும், உதவிக்கணக்காளராகவும் கடமையாற்றிய முதல் இலங்கையராவார். லூக் கிரகரி, கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரியின் முதல் சுதேச அதிபராகவும், டிலாசால் சபையின் முதல் சுதேச முதல்வராகவும் திகழ்ந்த அருட்சகோதரராவார். பீற்றர் அல்காந்திராப்பிள்ளை அ.ம.தி., இலங்கையிலும் பிரித்தானிய உலகிலும் முதல் மாணவராகச் சிறந்து விளங்கிய அறிவா-ளியாவார். சமூக, சமய சிந்தனையாளராகவும், கொழும்பு புனித யோசேப்பு கல்லூரியின் முதல் சுதேச அதிபராகவும், கொழும்பு பொரளை புனித அக்குயினாஸ் பல்கலைக்கழகத்தின் அமைப்பாளர்களில் ஒருவராகவும், முதல் துணைவேந்தராகவும் திகழ்ந்த இலங்கையராவார். இவரது குடும்பத்தை விமர்சிப்பவர்கள் 'பேரவா' கொண்டிருந்தனர் எனவும் சந்தர்ப்பவாதிகள் எனவும், எமிலியானுஸ்பிள்ளையும் இவ்வாறே தம்மை உயர்த்தினார் எனவும் கூறுகின்றனர். இக் குடும்பத்தினர் கொழும்பு வாழ் ஆங்கிலேய அரசு மற்றும் கத்தோலிக்க திருஅவைத் தலைவர்களுடன் கொண்டிருந்த நல்லுறவு காரணமாக இவ் விமர்சனம் எழுந்தாலும், இவர்களின் மேல் ஏனையோர் கொண்டிருந்த நம்பிக்கையும், நன்மதிப்பும், இவர்களின் கல்வித் தகைமையும், நிர்வாகத் திறமையும் இதற்குக் காரணமாக அமைந்திருந்தன. எனவே இவர்களது முன்னேற்றத்தை 'பேரவா' என்ற சொல்லிற்குள் இலகுவாக அடக்கிவிட முடியாது. இப்பின்னணியில் வந்த எமிலியானுஸ்பிள்ளையும் இலங்கைத் திருஅவையில் ஒரே மறைமாவட்டத்தில் மூன்று விதமான பணிகளை வகித்த முதல் இலங்கையராவார். முதல் சுதேச யாழ். மாவட்ட இளம் அருட்பணி முதல்வராகவும் (குருமுதல்வர்), யாழ். மாவட்டக் கத்தோலிக்கப் பாடசாலைகளின் முதல் சுதேச பொதுமுகாமையாளராகவும் பணியாற்றியதோடு இலங்கை சுதந்திரமடைந்த வேளை ஐரோப்பிய மறையறிவிப்பாளர்கள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது யாழ். மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்ற முதல் சுதேச ஆயராகவும் திகழ்ந்தார். உயர் கல்வி மற்றும் அருட்பணி உருவாக்கம் எமிலியானுஸ்பிள்ளையுடன் கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியில் கல்வி கற்ற டிலாசால் சபையினர் பலர் இவரது மதிநுட்பத்துடன்கூடிய கல்வித்திறமை பற்றி வியந்து பாராட்டினர். கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும் கல்வியோடு விளையாட்டுத்துறையிலும் இவர் பெருமைதேடிக் கொடுத்தார். விசேடமாக இரு இடங்களிலும் உதைபந்தாட்டக் குழுவிற்குத் தலைமை வகித்திருந்தார். ஒக்ஸ்போட், கேம்பிறிட்ஜ் போன்ற பிரித்தானியப் பல்கலைக்கழகங்கள் பல பட்டதாரி இறைபணியாளர்களை உலகத்திருச்சபைக்கு வழங்கியவேளை இலங்கைப் பல்கலைக் கழகமும் முதலில் இவரையே விஞ்ஞானப் பட்டதாரித் தலைவராக யாழ். திரு அவைக்கு வழங்கிப் பெருமை கொண்டது. இக்குடும்பத்தின் பாரம்பரிய வரலாற்றுப் பின்னணியை அறிந்த அந்நாள் யாழ். மறைமாவட்ட ஆயர் யூலியஸ் புறோ (1920-1923) இக் குடும்பத்தின் சேவை மறைமாவட்டத்திற்குத் தேவை என்பதை உணர்ந்து, ஜேக்கப்பிள்ளையிடம் தன் கோரிக்கையை இவ்வாறு முன்வைத்தார். "உமது மூத்த மகனை (வண. பிதா கயித்தான் பிள்ளை) கொழும்பு மறைமாவட்டத்திற்கு அர்ப்பணித்து விட்டீர், உமது அடுத்த மகன் எமிலை யாழ். மறைமாவட்டத்திற்கு அளித்தாக வேண்டும். அவர் திருமணம் செய்ய விரும்பினால் அவரது திருமணத்திற்கு நான் சமூகமளிப்பேன். ஆனால், அவர் கொழும்பு மறை மாவட்டக் குரவர் ஆவதாயின் அவரது குருப் பட்டாபிஷேகத்தில் நான் சமூகமளியேன்!" தந்தையாரும் சற்றுத் தயக்கத்துடன் பேராசிரியர் C. சுந்தரலிங்கத்தைப் பல்கலைக்கழகத்தில் சந்தித்தார். எடுப்பான தோற்றத்துடன் வந்தவரை, யாழ்ப்பாணத் தமிழன் என அடையாளம் கண்டவர், மகிழ்வுடன் உள்ளே வரவேற்றார். கலங்கிய கண்களுடன் "எனக்கு ஐந்து ஆண் மக்கள். அவர்கள் எல்லாரையும் உங்களுக்குத் தெரிய வேண்டும். மூவரும் திருச்சபையின் தொண்டுக்குத் தம்மை அர்ப்பணித்து விட்டார்கள். எமிலியானுஸ்பிள்ளையும் அவர்களின் பின்னாலே போகப் போகிறேன் என்று நிற்கிறார்." அழுகை வார்த்தைகளைத் தடுத்தன. "அவரின் இப்போக்கை நீங்கள் தடுக்க வேண்டும்." என்று கூறி முடித்தர். "பெரியவரே நீர் கொடுத்து வைத்தவர். தனது பிள்ளைகளில் நால்வரை திருஅவைக்கு அர்ப்பணிக்க இறைவன் வேறு எத்தந்தையையாவது பணித்திருக்கிறாரா?... அவர் செல்லவிரும்பும் பாதையில் முட்டுக்கட்டை போட வேண்டாம்." எனப் பேராசிரியர் பதிலளித்தார. கவலையிருந்தாலும் எமிலியானுஸ்பிள்ளையை ஆயர் கேட்டவாறே தந்தை தரச் சம்மதித்தார்.

பட்டதாரியாகப் புனித மாட்டீனார் குருமடத்திற்கு வந்த போது அவ்வேளை புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரும் குருமட இயக்குனருமான அருட்பணி. ஜோண் அல்பிரட் கியோாமார் அ.ம.தியால் வரவேற்கப்பட்டு அவரது வகுப்புத் தோழர்களான அருட்சகோதரர்கள் பி. சூசைப்பிள்ளை அ.ம.தி., ஜி.ஏ.குருசாமி அ.ம.தி., பி.ஜே. ஜீவரட்ணம் அ.ம.தி. ஆகியோருக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். 1924இல் (தந்தையின் இறப்பு 1924.04.28) இவர்கள் நவதுறவுப் பயிற்சிக்காக அ.ம.தி. சபையினரின் கொழும்பு, பம்பலப்பிட்டி புனித பிரான்சிஸ் சேவியர் நவத்துறவுப் பயிற்சியகத்தில் இணைந்த போது அங்கு கொழும்பில் இருந்து வந்து இணைந்தவர் பெஞ்யமின் தோமஸ் கூறே ஆவார். அதி-பர் லூயிஸ் பரெட் அ.ம.தி.யால் நவதுறவு வகுப்புத் தலைவராக நியமிக்கப்பட்டார். பயிற்சி முடிவில் இவர் 1925 ஜனவரி 25இல் முதல் அர்ப்பண வாக்குறுதிகளை அளித்தார். நண்பன் கூறேயுடன் அறிமுக மெய்யியல், அறிமுக விவிலியப் பாடங்களைக் கொழும்பு புனித பேணாட் உயர் பயிற்சியகத்தில் கற்றார்.

(தொடரும்...)

# விண்ணக வாழ்வின் நினைவஞ்சலிகள்

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அழகானது"

**28ம் ஆண்டு நினைவுகளுடன்**



## வைரமுத்து சூசைப்பிள்ளை

(சமாதான நீதவான்)
(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அலுவலர்)

**மண்ணில் :- 06.01.1921**
**விண்ணில் :- 12.12.1994**

**25ம் ஆண்டு நினைவுகளுடன்**



## சூசைப்பிள்ளை லூர்த்தம்மா

**மண்ணில் :- 07.08.1926**
**விண்ணில் :- 11.01.1997**

**அன்பே உருவாகி எங்களைப் பராமரித்துப்**
**பாதுகாத்த பப்பா! அம்மா!**
**ஏங்கித் தவிக்கின்றோம்**
**அந்த நாட்கள் இன்று போல் - எம்**
**கண்களில் நிழலாடுகிறது**

**உங்கள் முன்மாதிரியான வாழ்வால்**
**உங்கள் நம்பிக்கையான செபங்களால்**
**நிறைவாய் வாழ்கின்றோம்**

*"பத்மவாசம்"*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

*நீங்கா நினைவுகளுடன்*
*பிள்ளைகள், மருமக்கள்*
*பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை*

Ad 03

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்**
27
.
08
.
1938



**விண்ணில்**
21
.
01
.
2021

அமரர்

## சவிரிமுத்து நீக்கிலாப்பிள்ளை

*'சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்" (அரு 17:4)*

அப்பா!
அன்பும் அறிவும் ஊட்டி
பாசமும் நேசமும் காட்டி
பக்தியிலும் பண்பிலும் எமை வளர்த்து
எம் பசி போக்க உம் பசி மறந்து
கல்லும் மண்ணும் சுமந்தீர்களே
சோர்வை உம் வாழ்வில்
கண்டதில்லையே அப்பா,
எமக்காக எல்லாம் செய்தீரே
இப்போது நீர் எமை விட்டுச் சென்று
ஓராண்டு ஆனதே!

அப்பா அம்மா நீவீர் இருவரும்
எம்மைத் தவிக்கவிட்டு சென்றதேனோ
உங்களின் ஆன்மா இறைவனில்
இளைப்பாற வேண்டுகிறோம்.

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**
**தகவல்: அருட்சகோதரி ம.அஜந்தா அ.கா**

AD -01

# இறை அழைப்பில் 10ம் ஆண்டு நினைவஞ்சலி

**தாயின் மடியில்**
14
.
12
.
1932



**இறையடியில்**
12
.
01
.
2012

## அமரர் டானியல் யேசுதாசன்
## (பொறியியலாளர்)

வருடங்கள் பத்தல்ல பல்லாண்டு ஆனாலும் மறக்க
முடியாமல் எம் நெஞ்சங்களில் நிறைந்துள்ளீர்
நாள் தோறும் திருப்பலி கண்டு தொடங்கும் உம்
பணி வாழ்வு நமக்கோர் நல்லுதாரணமாகுமே.
வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாது உதவும்
மனதால் பல்லோர் மனதில் பசுமையாய் நிலைகொண்டீர்
டானியல் குடும்பத்தின் மூத்தோனாகத்
தூணாக வாழ்ந்து எம்மவர்க்கு வாழ்ந்து
வழிகாட்டிய நல்லுறவே, உடலால் நீங்கள் மறைந்தாலும்
உங்களை எம் இதயத்தில் சுமந்து நிதமும் வாழ்கின்றோம்
இறை சந்நிதியில் உங்கள் ஆன்மா சாந்திபெற
மறவாமல் அனுதினமும் ஆண்டவரை வேண்டிடுவோம்

**உம் பிரிவால் துயருறும்**
**மனைவி, மக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**சகோதரிகள்**
**மற்றும்**
**உறவினர்**

21 A **ஜானகி லேன்**
**பம்பலப்பிட்டி**

AD 02

## குடும்ப மறைக்கல்வியும்

( 7ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று 24 மணி நேரமும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறது. அன்று தாத்தா, பாட்டிகள் நீதிநெறிக் கதைகளைச் சொல்லிக் குழந்தைகளைத் தூங்க வைத்தார்கள். இன்றோ அவை பாலியல் உணர்வுகளைத் தூண்டுகின்ற, வக்கிர உணர்வுகளைத் தட்டி எழுப்புகின்ற நிகழ்வுகளாக உள்ளன. இந்நிலையில் கத்தோலிக்கக் குடும்பங்களில் அன்றிருந்த குடும்ப செபமாலையும். குடும்ப விவிலிய வாசிப்பும் மற்றக் கத்தோலிக்க பழக்க வழக்கங்களும் தொலைக்காட்சித் தொடர்களில் தொலைந்து போய்விட்டன. சுருங்கச் சொல்லின் இன்றைய குடும்பங்கள் வாழ்க்கை நெறியைத் தொலைத்து, திக்குத் தெரியாமல் எங்கேயோ சென்று கொண்டிருக்கின்றன.

**4. குடும்ப மறைக்கல்வி - காலத்தின் கட்டாயம்**

குடும்பத்தின் புனிதத்தையும் மாண்பையும் மீண்டும் குடும்பங்களிலே நிலை நாட்டவும், கத்தோலிக்க விசுவாசத்தை ஆழமாக வேரூன்றவும் குடும்ப மறைக்கல்வி இன்று காலத்தின் கட்டாயமாகிறது. குடும்ப மறைக்கல்வி என்பது ஒரு குடும்பத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லா உறுப்பினர்களும் கத்தோலிக்க விசுவாசத்தை அறிந்து கொள்வதிலும், அவற்றில் வளர்வதிலும் ஒன்றாகச் சேர்ந்து எடுத்துக்கொள்கின்ற தொடர் பயற்சியாகும். இத்தொடர் பயிற்றியில் பெற்றோர்களும், பங்குத்தளமும் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு முதல் நற்செய்தியாளர்களாகத் திகழ்கிறார்கள், அவர்களை விசுவாசத்தில் வளர்ப்பது அவர்களது தலையாய கடமையாகிறது. பங்குத்தளம் அவ்விசுவாசத்தை வளர்க்கத் தேவையான சூழலையும், பண்படுத்த தொடர்பயிற்சியையும் அளிக்கிறது.

# 31ம் நாள் நினைவஞ்சலி

"உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்"
(யோவான் 11:26)

**பிறப்பு**
29
.
11
.
1947



**இறப்பு**
22
.
12
.
2021

## அமரர் மரியநாயகம் மேரியோசேப் ஸ்ரான்லி


அப்பா!
ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
ஆருயிரான உங்கள் அன்பு முகம்
அழகாக எப்போதும் தெரிகிறது
பாசம் பொழிந்து பக்குவமாய் வளர்ந்தீர்கள்
பாரினில் நாம் உயர பலமாக இருந்தீர்கள்
நன்றி அப்பா...
நேசமான இறைவனின் மடியில் இளைப்பாறுங்கள்
எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்

அப்பாவின் இழப்பிலே நாம் கலங்கி நின்ற வேளையில் ஆறுதலாக. தேற்றரவாக எம்மோடு பயணித்த அன்பான உறவுகளை நன்றியோடு நினைக்கின்றோம். தொடர்ந்தும் அவருக்காக செபிக்கவும் அழைக்கின்றோம்.
அப்பாவின் ஆன்ம ஈடேற்றத்துக்காக 21.01. 2022 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

குடும்பத்தினர்

AD 05

# பாசையூரில் "கரோல் ஊர்திப் பவனி"



புதியன புனையும் முனைப்புடன் "கரோல் ஊர்திப் பவனி" ஒன்றை, பாசையூர் பாடகர் குழாமும் மறைக்கல்வி சமூகமும் இணைந்து, பங்குத்தந்தை அருட்திரு. ம.ஜெறோ செல்வநாயகம் அடிகளின் வழிநடத்தலில், 2021 டிசம்பர் 26, 27 நாட்களில் நிகழ்த்தியுள்ளனர்.

ஒளிமயமான ஓர் ஊர்தியில் இளைஞரும் மகளிரும் கரோல் கீதங்கள் இசைத்து முன்செல்ல, மறு ஊர்தியில் மறைக்கல்வி சிறுவர் சிறுமியர் ஒளிவீசும் பாலன் குடிலிலே, குழந்தை இயேசுவுடன் அன்னை மரி, தந்தை யோசேப்பு, வான தூதர், இடையர்கள், மூவரசர்கள் யாவரையும் உயிரோட்டமாகச் சித்தரித்தபடி வலம் வந்தனர்.

பாஷையூர்ப் பங்கின் வீதிகள் தோறும் இவர்கள் ஊர்ந்து சென்று, "உங்களுக்காக இறைமகன் ஏழைக் குழந்தையாகப் பிறந்துள்ளார்" என்று நற்செய்தியை நவின்றார்கள். இறைமக்கள் ஆவலாய் வரவேற்று செவிமடுத்து ரசித்தார்கள்.

# ஒதியமலை மக்களுக்கு உலர் உணவு உதவி



கனடா மொன்றியல் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகமான "மீட்பின் அன்னை மறைத்தளத்தின்" அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமாகிய ஒதியமலைக் கிராம மக்களுக்கான ஒரு தொகுதி உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கடந்தமாதம் 26ஆம் திகதி ஒதியமலைக் கிராமத்தில் நடைபெற்றது. அளம்பில் பங்குத்தந்தை அருட்திரு S. யூட் அமலதாஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் அளம்பில் புனித அந்தோனியார் ஆலய இளையோர் மன்றத்தினர் மற்றும் ஒதியமலைக் கிராம சேவையாளரின் உதவியோடும் இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

# பொஸ்கோ வித்தியாலயத்தில் செயற்திறன் வகுப்பறை



யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட செயற்திறன் வகுப்பறைத் திறப்புவிழா 7ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி அஞ்சலிக்கா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பாடசாலையின் புதிய கட்டடத்தொகுதியில் தரம் 3 வகுப்பறையில் அமையப்பெற்ற இச்செயற்திறன் வகுப்பறைக் கூடத்தை வடமாகாணக் கல்வித்திணைக்களப் பாடசாலை வேலைகள் அலுவலகப் பணிப்பாளர் வேதநாயகம் மேனன் அவர்கள் திறந்துவைத்து செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

# பத்திரிசியார் கல்லூரி மாணவர்களுக்கு உயிர்காப்புப் பயிற்சி




இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் நெறிப்படுத்தலில் அமெரிக்கன் கோணர் நிலையத்தின் (American Corner) யாழ் கிளையின் ஊடாக நடாத்தப்பட்ட உயிர்க்காப்பு (First Aid) தொடர்பான செயலமர்வில் புனித பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த 15 மாணவர்கள் கலந்து பயிற்சிகளைப் பெற்றனர். பாடசாலை வேளைகளிலும் அதற்கு முன்பும், பின்பும் இடம்பெறக்கூடிய விபத்துக்களின் போது முதலுதவிச் சிகிச்சைகளை வழங்கிப் பாடசாலை மாணவர்களை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது பற்றிய விளக்க செயற்பாட்டுமுறை ஊடாக சிறப்பான பயிற்சி இவர்களுக்கு வழங்கப்பட்டது.

# யாழ் சிறைச்சாலை கரோல் நிகழ்வு



யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கைதிகளுக்கான வருடாந்த கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வு கடந்த 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். சிறைச்சாலையில் சிறைச்சாலை ஆன்மீகக் குரு அருட்திரு A.P. திருமகன் அடிகளின் தலைமையில் நடைபெற்றது. காலை திருப்பலியோடு ஆரம்பமான இந் நிகழ்வில் கைதிகளினால் கரோல் கீதங்கள் இசைக்கப்பட்டு அவர்களுக்கான அன்பளிப்பு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறைச்சாலை அதிகாரி, கைதிகளின் புனர்வாழ்வுக்குப் பொறுப்பான அதிகாரி மற்றும் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர். 500 வரையான கைதிகளுக்கு வழங்கப்பட்ட பொதிகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள் அருட்திரு A.P. திருமகன் அடிகளின் முயற்சியினால் பங்குத் தளங்களுடாக மக்களிடமிருந்து பெறப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# குளமங்கால்ப் பங்கில் புனித சவேரியார் இளைஞர் மன்ற ஒன்றுகூடல்



குளமங்கால் புனித சவேரியார் ஆலய இளையோருக்கான ஒன்றுகூடல் நிகழ்வானது மிக நீண்ட காலத்திற்குப் பின்பு புனித சவேரியார் ஆலய வளாகத்தில் பங்குத்தந்தை அருட்பணி S. J. C. பாஸ்கரன் அடிகளாரின் தலைமையில் சனிக்கிழமை (06.11.2021) அன்று சிறப்பாக நடைபெற்றது. "எங்கள் முன்னோர் ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்கி, எங்களுக்குத் தந்த இந்த அழகிய கிராம,ஆலய, சமூக வாழ்வை அடுத்த நிலைக்கு உயர்த்த, "ஒன்றிணைந்து பயணிப்போம்" என்ற கருப்பொருளில் இவ் ஒன்றுகூடல் நடைபெற்றது. இவ் ஒன்று கூடலில் 117 இளைஞர்கள் பங்குபற்றியமை ஒரு சிறப்பம்சமாகும்.

யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை A.A. ஸ்ரீபன் மற்றும் உடுவில்-மல்வம் பங்குத்தந்தை அருட்தந்தை S. லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டு, சிறப்பித்துத் தமது கருத்துரைகளை வழங்கி, இளைஞர்களை உற்சாகப்படுத்தி, மாபெரும் சக்தியாக ஒன்றிணைய வழிகாட்டினர்.

இந்நிகழ்வானது மாலை 5 மணிக்கு ஆரம்பச்செபத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பங்குத்தந்தை உரையும், நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. தொடர்ந்து சில நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் இராவுணவு வழங்கப்பட்டது. இறுதியாக முடிவுச் செபத்துடன் ஒன்றுகூடல் நிறைவு பெற்றது.

# பதக்கங்களை வென்ற திருமறைக் கலாமன்றப் பயிலுனர்கள்



யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலா மன்றத்தின் ஓவியக்கூடத்தில் நடைபெற்றுவரும் ஆங்கிலக் கற்கைநெறியில் கல்வி பயிலும் மாணவர்கள் INTERNATIONAL INSTITUTE OF MUSIC, SPEECH AND DRAMA நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் தோற்றி தங்கப்பதக்கங்களையும் வெள்ளிப் பதக்கங்களையும் வென்று யாழ் மாவட்டத்தில் முதல் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இவ்வகுப்புக்களில் பல சிறார்கள் இணைந்து கல்விபயின்று வருகின்றார்கள். இவர்களில் 21 மாணவர்கள் இப்பரீட்சையில் பங்குபற்றி 9 மாணவர்கள் தங்கப் பதக்கங்களையும் 11 மாணவர்கள் வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றுள்ளனர். அத்துடன் இப்பரீட்சையில் கலந்து பதக்கங்களைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு 8ஆம் திகதி நடைபெற்றது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.